பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 தை 22 புதன்கிழமை (04.02.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:070

### அரசிடமும் விடுதலைப் புலிகளிடமும் இணைத்தலைமை நாடுகள் கோரிக்கை

# பாதுகாப்பு வலயப் பகுதிகளில் இருந்தும் அதை நோக்கியும் தாக்குதல்கள் நடத்தாதீர்!

### ஆயுதங்களை கீழே வைத்து மோதலை நிறுத்த ஆராயுமாறு புலிகளுக்கு அழைப்பு

கொழும்பு, பெப். 04

தாக்குதலற்ற பிரதேசம் என இலங்கை அரசு அறிவித்துள்ள பகுதிகள், புதுக்குடியிருப்பு வைத்தியசாலை மற்றும் ஏனைய மருத்துவ மையங்கள் போன்றவற்றை நோக்கியும் அவற்றில் இருந்தும் தாக்குதல்களை நடத்தவேண்டாம் என்று இலங்கை அரசையும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் இணைத்தலைமை நாடுகள் கோரியிருக்கின்றன.

அதேவேளை- ஆயுதங்களைக் கீழே வைத்து மோதலை நிறுத்துவதற்கான வழிகள் குறித்து இலங்கை அரசுடன் கலந்தாலோசிக்குமாறும் இணைத்தலைமை நாடுகள் விடுதலைப்புலிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளன. (16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் தங்கியுள்ள மக்களைப் பாதுகாக்க வேண்டியது அவசியம்

### ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்துகிறது

கொழும்பு, பெப். 04

விடுதலைப்புலிகளின் பகுதியிலிருந்து பொதுமக்கள் வெளியேறுகிறார்களோ இல்லையோ அவர்களுக்கு உயிரிழப்பு ஏற்படுவதைத் தவிர்ப்பது முக்கியமானது என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இலங்கையிலுள்ள (16 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பு, சுதந்திரபுரம் பகுதிகளில் நேற்று மட்டும் 58 பேர் பலி; 84 பேர் காயம்

கொழும்பு,பெப்.4

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு மற்றும் சுதந்திரபுரம் பகுதிகளில் நடத்தப்பட்ட ஷெல் மற்றும் பீரங்கிக் குண்டுத் தாக்குதல்களில் நேற்று மட்டும் 58 பேர் கொல்லப்பட்டனர்; 84 பேர் காய மடைந்துள்ளனர் என்று இணையத் தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கொல்லப்பட்டவர்களில் பிஞ்சுக்குழந்தைகள் இரண் டும் அடங்குகின்றன.

பீரங்கித் தாக்குதல்கள் தொடர்வதால் காயமடைந்தவர்களை காப்பாற்றும் நடவடிக்கைகளும் சரிவர இடம் பெறவில்லை. இதனால் உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழருக்காக மலேஷியாவில் தமிழ் இளைஞர் உயிர்த்தியாகம்

பெப்.4

ஈழத் தமிழர் படுகொலை தடுத்து நிறுத்தப்படவேண்டும், இலங்கையில் போரை நிறுத்தவேண்டும் எனக் கோரி மலேஷிய தமிழ் இளைஞர் ஒருவர் லொறி ஒன்றின் முன் பாய்ந்து தனது உயிரை மாய்த்துக்கொண்டார் என இணையத்தளத்தில் செய்தி வெளியாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை ஜோகூர் மாநிலத்தைச் சேர்ந்த 29 வயதுடைய ஸ்டீபன் ஜெகதீஸன் என்ற இளைஞரே இவ்வாறு உயிர்த்தியாகம் செய்தார்.

## உண்மையான சுதந்திரம் பிறக்கும் நாள் எமக்கு எட்டக்கூடிய தூரத்திலேயே உள்ளது

### சுதந்திரதினச் செய்தியில் ஜனாதிபதி



கொழும்பு, பெப்.4

தாய்நாட்டிலிருந்து பயங்கரவாதம் இறுதியாக அழிக்கப்பட்டு எமது மக்கள் அனைவருக்கும் உண்மையான சுதந்திரம் பிறக்கும் நாள் எமக்கு எட்டக்கூடிய தூரத்திலேயே உள்ளது.

இன்றைய சுதந் திரதினத்தையொட்டி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

ஜனாதிபதி தமது சுதந்திர தினச் செய்தியில் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு, ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் வவுனியா செல்ல அனுமதி மறுத்து வழிமறிப்பு!

கொழும்பு, பெப். 04

மன்னார் ஆயர் இராயப்பு ஜோசெப்பைச் சந்திப்பதற்காகக் கொழும்பிலிருந்து வவுனியா சென்று கொண்டிருந்த மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈரற்பெரியகுளம் சோதனைத் தடுப்பு முகாமில் வழிமறிக்கப்பட்டனர்.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின்றி அவர்கள் அப்பால் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று படையினரும் பொலிஸாரும் தெரிவித்ததால் சுமார் இரண்டரை மணி நேரம் தடுப்பு முகாம் (16 ஆம் பக்கம் பார்க்க)

## காலிமுகத்திடலில் இன்று சுதந்திரதின நிகழ்வுகள்

கொழும்பு, பெப். 04

இலங்கையின் 61ஆவது சுதந்திரதின விழா முக்கிய நிகழ்வுகள் இன்று காலை 8.30 மணிக்குத் தலைநகர் கொழும்பு காலிமுகத்திடலில் ஆரம்பமாகவுள்ளன.

சுதந்திரதினத்தையொட்டிய 'தேசத்தின் மகுடம்' கண்காட்சி இன்று பிற்பகல் 4 மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகிறது. எதிர்வரும் 8ஆம் திகதிவரை தினமும் காலை 9 மணிமுதல் நள்ளரவு 12 மணிவரை கண்காட்சி நடைபெறும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, காலை 8.30 மணிக்கு காலிமுகத்திடலுக்கு வருகை தந்து தேசியக் கொடியை ஏற்றிவைப்பதோடு 61ஆவது சுதந்திரதின விழா ஆரம்பமாகும். (16 ஆம் பக்கம் பார்க்க)

## மாநிலம் முழுவதிலும் ஈழத்தமிழர் ஆதரவுப் பேரணி மூன்று நாள்கள் நடத்துவதற்கு தி.மு.க. முடிவு

சென்னை, பெப்.4

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழகம் முழுவதும் பேரணி மற்றும் பிரசாரக் கூட்டங்களை நடத்துவது என்று தி.மு.க. செயற்குழு முடிவு செய்துள்ளது.

இலங்கைப் பிரச்சினையில் அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி விவாதிக்க நேற்றுக்காலை அறிவாலயத்தில் கூடிய செயற்குழு இலங்கைத் தமிழர் பாதுகாப்பு நலப் பேரவை என்ற அமைப்பை உருவாக்கி எதிர்வரும் 7 ஆம் திகதி சென்னையிலும் 8 ஆம் 9 ஆம் திகதிகளில் மாவட்ட தலைநகரங்களிலும் பேரணி மற்றும் பிரசாரப் பொதுக் கூட்டங்களை நடத்துவது என முடிவு செய்துள்ளது.

இலங்கைத் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வும் சுயாட்சியும் கிடைக்கும் வகையில் நிரந்தர அரசியல் தீர்வு காணப்பட (16 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் யுத்த நிறுத்தம் கொண்டுவரக் கோரி தமிழகத்தில் இன்று முழு அடைப்புப் போராட்டம்

### உணர்வுகளை வெளிப்படுத்த உச்ச நீதிமன்றம் அனுமதி

கொழும்பு பெப்.04

இலங்கையில் தமிழர் படுகொலை நிறுத்தப்படவேண்டும், அங்கு யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்த மத்திய அரசு உடனடியாக தலையிடவேண்டும் என்று கோரி இன்று தமிழகத்தில் முழு அடைப்பு போராட்டம் நடத்தப்படவுள்ளது.

ஈழத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்கவே முழு அடைப்பு போராட்டம் நடைபெறவுள்ளது.

முழு அடைப்பு போராட்டம் சட்ட விரோதமானது என்ற தமிழக அரசின் எச்சரிக்கையை மீறி இன்று திட்டமிட்டபடி போராட்டம் நடைபெறும் என்று ஈழத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் அறிவித்துள்ளது.

இன்று முழு அடைப்புப் போராட்டத்துக்கு த... (16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சிவமயம்

**யாழ். வண்ணையம்பதி நல்ல தண்ணீர்க் கிணற்றடி**
**ஸ்ரீ சாமுண்டாம்பாள் சமேத ஞானவைரவர் ஆலயம்**
**புனராவர்த்தன பிரதிஷ்டா**

# மஹா கும்பாபிஷேக திருமுகம்

## 06.02.2009



திருச்சிற்றம்பலம்

பரமனை மதித்திடாப் பங்கை யாசனன்
ஒரு தலை கிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமும்
புரிதரு வடுகனைப் பேற்றி செய்குவாம்

திருச்சிற்றம்பலம்

தென்கைலியம் எனவும் சிவபூமி எனவும் சிறப்பித்துக் கூறப்படும் இலங்கைத் திருநாட்டில் யாழ். மாநகரத்தில் சிவன் பண்ணை வீதியில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் ஸ்ரீ சாமுண்டாம்பாள் சமேத ஞான வைரவர் சுவாமிக்கும், பரிவார மூர்த்திகளுக்கும் மங்களகரமான தைமாதம் 24ஆம் நாள் (06.02.2009) வெள்ளிக்கிழமை காலை 7.06 மணி முதல் 8.11 வரை உள்ள மிருகசீரிட நட்சத்திரமும், சித்தயோகமும், கும்ப லக்கினமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் மஹா கும்பாபிஷேகம் நிகழ்த்துவதற்குத் திருவருள் கைகூடியுள்ளது. அத்தருணம் அடியார்கள் அனைவரும் ஆசார சீலர்களாக வருகை தந்து தரிசித்து எம்பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெறுக.

**கிரியா கால நிகழ்வுகள்**

04.02.2009 புதன் மு.ப. 11.24 மணிமுதல் கர்மாரம்பம் முதல் கிரியைகள்.
மாலை 7.05 - 8.05 ஸ்தூபிஸ்தானம், தீபஸ்தானம், பிம்பஸ்தானம்.
05.02.200[illegible] வியாழன் காலை 8.00 முதல் யாகபூசை, விசேட திரவிய ஹோமம்.
பி.ப. 3.00 யாக பூசை விப்பரிசாகுதி.
06.02.2009 வெள்ளி காலை 6.00 கிரியைகள் ஆரம்பித்து, 7.06 முதல் 8.11 வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்
மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்
தொடர்ந்து 12 தினங்கள் மண்டல அபிஷேகம் நடைபெறும்.

ஆலயத்தை புனரமைத்து மஹா கும்பாபிஷேகம் செய்பவர்: *நடராஜா சத்தியரூபன்*

**சிறி நதியா நகை மாளிகை**

*இல.01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

**சிறி நதியா டிஜிற்றல் கலர்லாப்**

*லக்ஷன் பிளாசா, 108A, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (உரிமையாளர்)*


# புலி ஆதரவுப் போராட்டத்தை கைவிடுமாறு கருணாநிதியிடம் கோருகின்றார் வீரவன்ஸ

கொழும்பு, பெப். 03

புலிகளுக்கு ஆதரவாக நடத்தப்படும் போராட்டங்களைக் கைவிடுமாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தமிழக முதல்வர் கருணாநிதிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பத்தரமுல்லையில் உள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

வன்னியில் புலிகள் மக்களை சிறைக்கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளனர். 48 மணி நேரத்துக்குள் அவர்களை விடுவிக்க வேண்டும் என்று ஜனாதிபதி புலிகளிடம் வேண்டுகோள் விடுத்த போதும் புலிகள் அந்த வேண்டுகோளை நிராகரித்துவிட்டனர்.

மாறாக புலிகள் அம்மக்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களைக் கொலை செய்து, கொலைப்பழியைப் படையினர் மீது போடுகின்றனர்.

இந்த உண்மையை தமிழ்நாடு சரியாக அறிந்திருந்தும் கூட அந்நாடு புலிகளுக்கு ஆதரவாகவே செயற்படுகின்றது. புலி ஆதரவுப் போராட்டங்களை நடத்துகின்றது.

தமிழக முதல்வர் கருணாநிதி இந்தப் போராட்டத்தைக் கைவிட வேண்டும். சிறைப்படுத்தியுள்ள மக்களை உடன் விடுவிக்க கருணாநிதி புலிகளுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

புலிகள் நாளுக்கு நாள் தோல்வியைத் தழுவிக்கொண்டு வருகின்றனர். வீரம்மிக்க எமது படையினர் புலிகளை இல்லாமல் செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் எவரும் யுத்தநிறுத்தம் பற்றியோ அதிகாரப் பகிர்வு பற்றியோ பேசக்கூடாது. நாம் நாட்டைப்பிரிக்காமல் ஒரு குடையின் கீழ் வைத்திருப்பதற்காகவே அரசுடன் இணைந்தோம்.

நாட்டின ஒருமைப்பாட்டுக்கு ஆபத்து ஏற்பட்டால் நாம் அரசில் இருக்கமாட்டோம். ஆனால், அரசு அப்படியானதொரு ஆபத்துக்கு இடம்கொடுக்காது.

ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி போன்றவர்களின் வருகை பற்றி நாம் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. அவர்களின் வருகையால் இலங்கையில் ஒருபோதும் யுத்தநிறுத்தம் ஏற்படாது.

யுத்தநிறுத்தத்தை மேற்கொள்ளுமாறு ஐரோப்பிய நாடுகளும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கின்றன. ஆனால், அரசு அதற்கு ஒருபோதும் இணங்காது. இந்நாட்டு மக்களும் இதற்கு இணங்கமாட்டார்கள் - என்றார். (அ-சி)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி பிரதி அதிபர் க.பத்மநாதனின்
அன்பு மாமியார்
**திருமதி மகேஸ்வரி சுந்தரமூர்த்தி** காலமானார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
யாழ்.மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி உப அதிபர் W.ஜெயசீலன் அவர்களின்
அன்புத் தாயார்
**திருமதி வில்லியம் இராசம்மா** காலமானார்.
அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா
ஊழியர்கள்,
யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஓடு, நிலத்திற்கு பதிக்கும் கல்லு, மரப்பலகை என்பன விற்பனைக்குண்டு.
[illegible]
(அம்மன் [illegible])
யாழ்ப்பாணம். T.P. 021 222 7604


## தென்மராட்சிக்கு இரு நாள்களில் 36 பேர் வந்து சேர்ந்தனர்

யாழ்ப்பாணம், பெப்.4

வடமராட்சி கிழக்கில் இருந்து 36 பேர் கடந்த ஞாயிறு, திங்கட்கிழமைகளில் தென்மராட்சியை வந்தடைந்தனர்.

படையினரின் உதவியுடன் வந்து சேர்ந்த இவர்களுக்கு தேவையான உதவிகளை நலன்புரி நிலைய அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். (1-131)

## அல்லாரை முகாம் மூடப்பட்டது

அல்லாரை தம்பு தோட்டத்தில் கடந்த 13 வருடங்களாக இயங்கி வந்த படை முகாம் மூடப்பட்டுள்ளது.

படைமுகாம் மூடப்பட்டு அங்கிருந்த தளபாடங்கள் அகற்றப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

முகாம் அமைந்திருந்ததால் மக்கள் போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டிருந்த கச்சாய் வீதி கடந்த நிஷா வெள்ளத்தின் பின்னர் திறந்து விடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (1-207)

## தேசியக்கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன

வண்ணை, பெப்.4

யாழ்.நகரப் பகுதியில் பரவலாக கடைகள் மற்றும் வாகனங்களில் தேசியக் கொடியான சிங்கக் கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது.

அதேவேளை பல அளவுகளில் கடைகளில் விற்பனைக்கும் குறிப்பாக புத்தகக் கடைகளில் கொடிகள் வைக்கப்பட்டுள்ளன.

யாழ்.காங்கேசன்துறை வீதியில் முட்டாஸ்கடை சந்திக்கும் வ.சி.கு. சந்திக்கும் இடைப்பட்ட பகுதி சிங்கக் கொடிகளால் தோறணம் போன்று நெருக்கமாக சோடிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (1-160)


## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 09.09.1948
மறைவு: 04.01.2008

**யோசப் மரியதாசன்**

ஆண்டொன்று சென்றாலும்
ஆறவில்லை எம்துயரம்
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
அப்பா என்றழைக்க நீங்கள் இல்லையே!
எங்களுக்காய் வாழ்ந்த அப்பாவே
இன்று நாம் சிந்திண்டு போய் இருக்கிறோம்
உங்கள் ஆறுதல் இல்லாமையால்

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## சுதந்திர உணர்வு கிட்டுமா?

இலங்கைத் தீவின் அறுபத்தியோராவது சுதந்திரதினம் இன்றாகும்.

பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தின் கொடி இத்தீவில் இறக்கப்பட்டு சிங்கக் கொடி உத்தியோகபூர்வ தேசியக் கொடியாக ஏற்றப்பட்டு இன்றுடன் அறுபத்தியொரு ஆண்டுகள் பூர்த்தியடைகின்றன.

இலங்கையின் தேசியக் கொடியாக வாளேந்திய சிங்கம் நிர்ணயிக்கப்பட்ட போதே அந்தக் கொடி அமைப்பைத் தமிழர்கள் எதிர்த்தார்கள்; அதிருப்தி வெளியிட்டார்கள்.

ஆனால் ஜனநாயகத்தின் சிறப்பியல்பு அல்லது மாண்பு என்று போற்றப்படும் *'பெரும்பான்மையினரின் தீர்மானமே முடிவு'* என்ற கேலிக்கூத்துக் கோட்பாட்டின் கீழ், இலங்கைத் தீவின் பெரும்பான்மையினரான சிங்களவர்களின் 'சிங்கக் கொடித் தெரிவு' சிறுபான்மையினரான தமிழர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டிய முடிவாக வல்வந்தமாகத் திணிக்கப்பட்டது.

அன்று முதல் இன்று வரை *'பெரும்பான்மையினரின் முடிவே நீதி'* என்ற கோட்பாட்டின் கீழ், அனைத்து அம்சங்களுமே சிறுபான்மையினரின் மீது, பெரும்பான்மையினரால் வல்வந்தமாகத் திணிக்கப்படுவது சட்டச் சிறப்பியல்பாக அங்கீகரிக்கப்படும் நிலைமை இங்கு நீடிக்கின்றது.

சரித்திர காலம் தொட்டு இத்தீவில் சிங்களவர்களைப் போல தனித்துவமான மொழி, பாரம்பரிய தாயகம், சிறப்பான பண்பாடு, விசேடமான வாழ்க்கைமுறை ஆகியவற்றோடு ஒரு தேசியக் கட்டமைப்புடன் வாழ்ந்து வருபவர்கள் தமிழர்கள். அவர்களின் அந்தத் தனித்துவமான கட்டமைப்பின் அடிப்படைகளை இலக்குவைத்துச் சிதைக்கும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் இந்த ஜனநாயகக் கேலிக் கூத்தின் 'சிறப்பியல்புகளுக்கு' அமையவே முன்னெடுக்கப்பட்டன.

அதன் காரணமாகத்தான் இன்று தென்னிலங்கை கொண்டாடும் சுதந்திர தினத்தை அந்த சுதந்திர உணர்வுடன் அனுஷ்டிக்க முடியாதவர்களாகத் தமிழர்கள் ஒடுக்கப்பட்டு இருக்கின்றார்கள்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ வெற்றிகளின் களிப்பின் உச்சத்தில் இந்த சுதந்திர தினத்தைக் கொண்டாடும் ஆட்சிப் பீடத்துக்கு, இந்த உண்மையை எடுத்துரைப்பது கூட சில சமயங்களில் கசப்பாக இருக்கும். ஆனால் அதுதான் தமிழர்தம் உள்ளக் குமுறல். அதை மறைக்க முடியாது.

1948 ஆம் ஆண்டு பெற்றுக்கொண்ட சுதந்திரத்தை மிஞ்சும் வகையில் இந்த 61 ஆவது சுதந்திரதினத்தைக் கொண்டாட வேண்டும் என நாட்டு மக்களுக்குத் தாம் விடுத்த செய்தியில் தெரிவித்திருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அந்தச் செய்தியில் குறிப்பிட்டிருக்கும் இன்னொரு விடயத்தையும் நாம் இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

*''பயங்கரவாதிகளான புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்டிருக்கும் வடபகுதி அப்பாவித் தமிழ் மக்களை விடுவித்து, அரசமைப்பின் கீழ் அவர்களுக்கு உரித்தான உரிமைகளும் சமத்துவமும் வழங்கப்படும் என நான் உறுதி கூறுகின்றேன்.''* - என்ற சாரப்படக் குறிப்பிட்டிருக்கிறார் ஜனாதிபதி ராஜபக்ஷ.

ஆக, இந்த அரசமைப்பில் - 1978 ஆம் ஆண்டின் அரசயாப்பில் - கூறப்பட்டவற்றைத் தமிழர்களுக்குப் பெற்றுத் தருவதுதான் அவர்களுக்கு ஜனாதிபதியின் உச்சபட்ச சாதிப்பாக - சாதனையாக - இருக்கப் போகின்றது.

இலங்கைத் தீவில் சிங்கக்கொடி ஏற்றப்பட்ட பின்னர் இங்கு உருவாக்கப்பட்ட 1972 ஆம் ஆண்டின் அரசமைப்போ அல்லது இப்போது நடைமுறையில் உள்ள 1978 ஆம் ஆண்டின் அரசமைப்போ, இத்தீவில் வாழும் தமிழர்களின் இணக்கத்துடனோ, சம்மதத்துடனோ, உடன்பாட்டுடனோ கொண்டுவரப்பட்டவையல்ல. அந்த அரசமைப்புகளின் உருவாக்கத்தைத் தமிழர்கள் புறக்கணித்த நிலையில் பெரும்பான்மைச் சிங்களவர்களால் தமிழர்கள் மீது அது கட்டாயப்படுத்தித் திணிக்கப்பட்டது.

இன்று 'பயங்கரவாதம்' என்று தென்னிலங்கை அரசு சித்திரிக்கும் ஈழத் தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தின் மூலமே - வித்தே - இந்த அரசமைப்புகளில் இருந்துதான் தோற்றம் பெற்றது என்பது வரலாற்று உண்மை.

1948 இல் சுதந்திர இலங்கையின் முதலாவது அரசமைப்பில் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் இருந்த 29 ஆவது பிரிவைக் கூட அடியோடு நீக்கி, பௌத்தத்துக்கும் சிங்களத்துக்கும் தனித்து முன்னுரிமையும் மேன்மையும் கொடுப்பதை உறுதிப்படுத்தி, தமிழர் தம் தனித்துவத்துக்கு ஆப்பு வைத்து, அவர்களை ஆயுதம் ஏந்திய உரிமைப் போராட்டத்துக்கு நெட்டித்தள்ளியவையே இந்த அரசமைப்புகள்தாம்.

இத்தகைய அரசமைப்புகளின் கீழ் நீதி, நியாயம் தமக்குக் கிட்டவே கிட்டாது என்பதைக் கண்டறிந்த பின்னரே ஆயுத வன்முறைப் போராட்டத்தின் பால் தமிழர்கள் தள்ளப்பட்டார்கள். தமிழர் தரப்பின் ஆயுத வலிமையைத் தகர்த்து அழித்துவிட்டதாகக் கொக்கரிக்கும் கொழும்பு 'மீண்டும் பழைய குருடி கதவைத் திறவடி' என்ற கணக்கில் தற்போதைய அரசமைப்புக்குள் தமிழர்களுக்கு சமத்துவமும், உரிமைகளும் வழங்கிச் சாதிக்கப் போவதாகக் கதை விடுகின்றது.

சிறுபான்மையினரான தமிழர்களை[illegible] பொறுத்தவரை இந்த அரசமைப்பும் [illegible] அடிமைப் பட்டயமே. அதற்கு வெளி[illegible]யில் வந்து தமிழருக்கு நீதி செய்யும் நியாயப்போக்கு தென்னிலங்கை அரசியல் தலைமையிடம் இல்லாதவரை உண்மையான - நீதியான - சுதந்திர உணர்வு இங்கு தமிழர்களுக்குக் கிட்டப்போவதில்லை.

# இலங்கை இராணுவத்தின் தாக்குதல்களினால் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுகிறார்கள்

## ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் குற்றச்சாட்டு

கொழும்பு,பெப்.4

இலங்கை இராணுவம் அப்பாவிச் சிவிலியன்களைப் படுகொலை செய்வதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் றொபேர்ட் ஏவன்ஸ் தெரிவித்துள்ளார்.

பாரிய மனிதப் பேரவலம் இடம் பெற்று வருவதாகவும் இலங்கை நிலவரம் மற்றுமொரு காஸா அவலம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கையில் சிவிலியன்கள் படுகொலை செய்யப்படுவதற்கான முழுப் பொறுப்பையும் அரச படையினர் ஏற்கவேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு வெற்றிகள் குறித்து இலங்கை அரசாங்கம் பெருமிதம் அடைந்தபோதிலும் சொந்த. மண்ணின் மைந்தர்கள் பலர் பேரவலத்தை எதிர்நோக்கியிருப்பதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். றொபேர்ட் ஏவன்ஸ், ஐரோப்பிய ஒன்றியத்தின் தென் ஆசிய பிராந்திய வலயத்திற்கான வெளியுறவுத்துறைத் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிவிலியன் கொல்லப்படுவதாக வெளியாகும் செய்திகளை அரசாங்கம் நிராகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறெனினும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வாகனங்கள் மீதும், வைத்தியசாலைக் கட்டடங்கள் மீதும் தாக்குதல் மேற்கொண்டு வருவதாகவும் காஸா நிலப்பரப்பில் இடம் பெறும் பேரவலங்களுக்கு நிகரான ஒரு சூழ்நிலை இலங்கையில் உருவாகியுள்ளதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# முல்லைத்தீவிலிருந்து வெளியேறாத மக்கள் புலிகளுக்கு உதவுவோராகவே கருதப்படுவர்

## இவ்வாறு எச்சரிக்கை விடுக்கிறது அரசு

கொழும்பு, பெப்.04

முல்லைத்தீவில் உள்ள மக்கள் உடனடியாக இடம்பெயர்ந்து வவுனியாவுக்கு வராவிட்டால் அவர்கள் புலிகளுக்கு உதவிசெய்து வருகிறார்கள் என்று கருதவேண்டிவரும் என்று ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்த்தன நேற்றுக் கூறினார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

முல்லைத்தீவில் 4 லட்சம் மக்கள் உள்ளனர் என்றும் அவர்கள் பேரவலத்தை எதிர்கொண்டுள்ளனர் என்றும் எதிர்க்கட்சி எம்.பி. ஒருவர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். அதில் எந்த உண்மையுமில்லை.

முல்லைத்தீவு அரச அதிபரின் தகவலின்படி ஒருலட்சத்து 13 ஆயிரம் மக்களே அங்கு உள்ளனர். தற்போது வரை ஆயிரத்து 80 குடும்பங்கள் முல்லைத்தீவில் இருந்து வவுனியாவுக்கு வந்துள்ளன. ஞாயிற்றுக்கிழமை கூட 240 பேர் முல்லைத்தீவில் இருந்து வந்தனர்.

இந்த மக்களால் வரமுடியும் என்றால் முல்லைத்தீவில் உள்ள ஒருலட்சம் மக்களால் ஏன் வரமுடியாது? இடம் பெயர்ந்து வராதவர்கள் புலிகளுக்கு உதவி செய்கிறார்கள் என்றே கருதவேண்டிவரும்.

இதேவேளை, இம்மக்களை விடுவிக்குமாறு சர்வதேச அமைப்புகள் புலிகளிடம் வேண்டுகோள் விடுக்க வேண்டும். அவ்வமைப்புகள் இது தொடர்பில் பலமாகக் குரல் எழுப்ப வேண்டும். அவ்வமைப்புகள் வன்னி மக்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்குவது மாத்திரம் போதாது. அதை அரசே செய்து கொள்ளும். இம்மக்களை விடுவிக்கக்கோரி யாழ்ப்பாணத்தில் ஒருலட்சம் மக்களால் ஆர்ப்பாட்டம் செய்யமுடியும் என்றால் ஏன் இந்த சர்வதேச அமைப்புகளால் முடியாது?

ஆகவே, சர்வதேச அமைப்புகள் இது விடயத்தில் தீவிரமாகச் செயற்பட வேண்டும் - என்றார். (அ-சி)

# கப்பூதுப் பகுதியில் கொள்ளையர்கள் அட்டகாசம்; பொருள்களை அடித்து நொருக்கிவிட்டுக் கொள்ளை

கரவெட்டி,பெப்.4

கரவெட்டி, கப்பூது பகுதியில் உள்ள பொதுமக்களின் வீடுகள் மற்றும் பாடசாலை ஆகியவற்றுக்குள் ஞாயிற்றுக்கிழமை இரவு புகுந்த கொள்ளையர்கள் அங்கிருந்த பெறுமதியான பொருள்களை அடித்து நொறுக்கி நாசம் செய்ததுடன் நகை, பணம் போன்றவற்றையும் திருடிச்சென்றுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாகப் பாதிக்கப்பட்டோர் நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இரவு 11 மணியளவில் சைக்கிள்களில் வந்த கொள்ளையர்கள் மின் இணைப்பைத் துண்டித்துவிட்டு கிராம அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர் ஒருவரது வீட்டுக்குள் சென்று அங்கிருந்த தொலைக்காட்சி மற்றும் பொருள்களை அடித்து நொருக்கியுள்ளனர்.

அத்துடன் அங்கிருந்து நகை, பணம் போன்றவற்றையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

அதுமட்டுமன்றி ஏகாம்பர வித்தியாசாலையின் கதவுகளை உடைத்து உட்சென்ற இவர்கள் அங்கிருந்த முக்கியம் வாய்ந்த கோவைகளைக் கிழித்து எறிந்து தீமூட்டியுள்ளனர்.

அருகிலுள்ள மற்றும் ஒருவரது வீட்டுக்குச் சென்று அங்கிருந்தவர்களை அச்சுறுத்தி நகைகளைக் கொள்ளையிட்டுச் சென்றதாகவும் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (203-70)

# முல்லைத்தீவில் இருந்து செல்லும் மக்களுக்காக செட்டிக்குளத்தில் 24,000 வீடுகள் கட்டத் திட்டம்

## 30 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ரிஷாத் தகவல்

கொழும்பு, பெப். 04

முல்லைத்தீவில் இருக்கும் சுமார் ஒன்றரை லட்சம் மக்களை வவுனியாவில் தங்கவைப்பதற்காக வவுனியா செட்டிக்குளத்தில் 24 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படுகின்றன என்று மீள்குடியேற்ற அமைச்சு தெரிவித்துள்ளது.

மூன்று கிராமங்களை உருவாக்கி அங்கு இவ்வீடுகள் அமைக்கப்படுகின்றன என்றும் பல அமைச்சுகள் ஒன்று சேர்ந்து இத்திட்டத்திற்கு முதற்கட்டமாக 30 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளன என்றும் மீள்குடியேற்ற அமைச்சர் ரிஷாத் பதியுதீன் நேற்றுக் கூறினார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெறற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

வன்னியில் இருந்து இதுவரை ஆயிரத்து 80 குடும்பங்கள் வவுனியாவுக்கு வந்துள்ளன. இவர்கள் வவுனியா மெனிக் பார்மிலும் நெலுங்குளத்திலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 300 மாணவர்களும் அடங்குகின்றனர். அம்மாணவர்கள் வவுனியாவில் கல்வியைத் தொடர வாய்ப்புகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன.

அதேபோல் பல்கலைக்கழகக் கல்வியை இடைநிறுத்திவிட்டு 12 மாணவர்கள் அகதிகளாக வந்திருந்தனர். அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வியைத் தொடர நாம் ஏற்பாடு செய்து கொடுத்துள்ளோம்.

தற்போது முல்லைத்தீவில் ஒரு லட்சத்து 13 ஆயிரத்து 83 பேர் உள்ளனர் என்று முல்லைத்தீவு அரச அதிபர் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி மற்றும் மன்னார் போன்ற இடங்களில் இருந்து முல்லைத்தீவுக்கு இடம் பெயர்ந்து சென்றவர்களையும் சேர்த்து அங்கு சுமார் ஒன்றரை லட்சம் பேர் இருப்பர் என்று நாம் நம்புகிறோம்.

**தனித்தனி வீடுகள் வழங்கப்படும்**

அவர்கள் அனைவரும் முல்லைத்தீவில் இருந்து வவுனியாவுக்கு இடம் பெயர்ந்து வருவர் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

அப்படி வரும் அனைவரையும் தங்கவைப்பதற்காக வவுனியா செட்டிக்குளத்தில் மூன்று கிராமங்களை உருவாக்கியுள்ளோம். ஒவ்வொன்றிலும் 8 ஆயிரம் வீடுகளை அமைக்கத் தொடங்கியுள்ளோம்.

மொத்தமாக 24 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படும். இடம்பெயர்ந்து வரும் அகதிகளுக்கு கூடாரங்களை வழங்காது வீடுகளை வழங்க முடிவெடுத்தே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.

அதன்படி அமைக்கப்படும் வீடுகளில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு வீடு வழங்கப்படும். மின்சாரம், குடிதண்ணீர், பாதை உள்ளிட்ட அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

இத்திட்டத்திற்கென முதற்கட்டமாக எனது அமைச்சால் 5 கோடி ரூபாவும், எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சால் 2 கோடி 50 லட்சம் ரூபாவும், குடிதண்ணீருக்காக 4 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இன்னும் பல அமைச்சுகளின் ஒதுக்கீடுகளையும் சேர்த்து இதுவரை முதற்கட்டமாக 30 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது - என்றார்.(அ-சி)

## நாளை

| | |
|---|---|
| தை 23 | 05.02.2009 |
| | வியாழக்கிழமை |
| திதி: | தசமி |
| | காலை 08.25 வரை |
| நட்சத்திரம்: | ரோகிணி |
| | [illegible] |
| [illegible] | [illegible] |
| ராகுகாலம்: | 02.55 - 03.35 |

# நெடுந்தீவு பிரதான வீதிகளில் தெருவிளக்குகள் பொருத்தப்படுகின்றன

நெடுந்தீவு,பெப்.4

நெடுந்தீவு பிரதான வீதியில் தெருவிளக்குகள் பொருத்தும் நடவடிக்கைகளை இலங்கை மின்சார சபை மேற்கொண்டுள்ளது.

வீதிகளின் முக்கிய பகுதிகளில் மின் வெளிச்சங்கள் வழங்கப்படவுள்ளதெனவும் இதற்கென 10 மின் குமிழ்கள் பொருத்தப்படவுள்ளதாகவும் கூறப்பட்டது.

இதுவரை இருளில் மூழ்கிக் கிடந்த வீதிகளில் வெளிச்சம் கிடைக்கவுள்ளது.

மைதான வீதி கடற்கரை வரையானது, மத்தி சனசமூக நிலையம் வரையான நெருக்கடி வீதி, மாதா கோவில் வீதி மேற்கு சாராப்பிட்டி வரையான வீதிகளில் மின்விநியோக வேலைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

மத்தி யாகப்பர் வீதிக்கான மின் விநியோக விஸ்தரிப்பு தற்சமயம் இடம் பெற்று வருகின்றது. (203-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

### பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

### ஆண்டுப் பொதுக் கூட்டம்-2009

யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின், பாடாசலை அபி விருத் திச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் 2009.02.15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கல்லூரி அதிபர் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு பெற்றோர், ஆசிரியர்கள் அனைவரையும் சமூகமளிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

கௌரவ செயலாளர் - பா.அ.ச.



## கோல்டன் ஈகிள் பாதுகாப்பு சேவை

(Walk In Interview)

கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்

(ஆண்கள்/பெண்கள்)

தகைமைகள்:

கல்வித் தகைமை: க.பொ.த. (சா/த) சித்தி

வயது: 20 தொடக்கம் 55 வரை

உயரம்: 5' 4''

சிறப்பு: a.இளைப்பாறிய பொலிஸ்/படை உத்தியோகத்தர்கள் என்போருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

b.சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர், சாரணர், விளையாட்டுத் துறை வீரர்கள் விரும்பத்தக்கது.

c.நல்ல கண் பார்வையும் தேகாரோக்கியமும் இருத்தல் வேண்டும்.

IV.சம்பளம்:

a.வருகை ஊக்குவிப்புப் பணம் விசேட சலுகை உட்பட மாதமொன்றுக்கு ரூபா 8900/-மூன்று மாதங்கள் தகுதிகாண் அடிப்படையில் ரூபா 9050 இற்கு குறையாத சம்பளம்.

b.EPF, ETF, Insurance செலுத்தப்படும்.

நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 07.02.2009 சனிக்கிழமையன்றும் 09.02.2009 திங்கட்கிழமையன்றும் நடைபெறும். கீழக்காணும் விலாசத்திற்கு மு.ப.10.00 மணி தொடக்கம் பி.ப.1.00 மணிவரை பின்வரும் ஆவணங்களுடன் சமூகம்கொடுக்கவும்.

i.கிராம உத்தியோகத்தரின் நற்சான்றுப் பத்திரம் (06 மாதத்திற்குட்பட்டது)

ii.பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்

iii.தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை

iv.கல்விச் சான்றிதழ்கள் மற்றும் பிற சான்றிதழ்கள் அனைத்தினதும் உண்மைப் பிரதியுடன் போட்டோப் பிரதியும் கொண்டுவரவும்.

பணிப்பாளர்.

கோல்டன் ஈகிள் பாதுகாப்பு சேவை

இல.337 1/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## கண்ணீர் அஞ்சலி



கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் மூத்த உறுப்பினர் சுப்பிரமணியம்

**முத்துக்குமாரசாமி**

அவர்களின் பாசமிகு தாயார்

அமரர் **சுப்பிரமணியம் செல்லம்மா**

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களை அவரின் குடும்பத்தினருக்குத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

லயன்ஸ் கழகம், கோப்பாய்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 10 . 03 . 1955



மறைவு 05 . 01 . 2009

## அமரர் சின்னத்துரை லோகநாதன்

கடந்த 05.01.2009 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் சின்னத்துரை லோகநாதன் அவர்களின் வீட்டுக் கிருத்தியம் இன்று (04.02.2009) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

"அகிலகம்", உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். குடும்பத்தினர்.

## ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் மெய்வன்மைப் போட்டி வெள்ளியன்று

மருதனார்மடம், பெப்.04

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை பிற்பகல் 1.00 மணிக்குக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.தேவநேசன் கலந்து கொள்கிறார். சிறப்பு விருந்தினர்களாக உடுவில் கோட்டக் கல்விப்பணிப்பாளர் செ.குபேரநாதன், ஸ்கந்தா பழைய மாணவர் சங்கத் தலைவர் எஸ்.பரமநாதன் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (1-55)


### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

கல்பேட்ஸ் மொத்தமாக விற்பனைக் குண்டு. தொடர்பு: ந.கணேஸ்வரன், 17 நாவலடி லேன், வண்ணார்பண்ணை. 0771350082



### PANDA Express 0212228250 UNIVERSAL COURIER

No 167, Kasthuriyar Road, Jaffna.

யாழ்நகரில் இருந்து சர்வதேசரீதியாக இருக்கும் உங்கள் உறவுகளிற்கு வேண்டிய ஆவணங்கள், பொதிகள் என்பவற்றை மிக குறைந்தகட்டணத்தில் உலகின் எந்தநாட்டிற்கும் பாதுகாப்பாகவும் விரைவாகவும் அனுப்பிவைக்கப்படும்

தற்போது குறைந்த கட்டணத்தில்...

யாழ் - கொழும்பு
கொழும்பு - யாழ் } பொதிகள் சேவை

Head Office
PANDA Express, No 30-1/20, W.E.De Silva Mw, Col-06. 0112500207

Jaffna Office
Computer Express, No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250

Nelliyady Office
Computer Express, No 07, Kanpollai Lane, Kodikamam Rd, Nelliyady. 0777222422

Chavakachcheri Office
Tharshan Communication, Sangathanai, Chavakachcheri.0602212538

Mannipay Office
Thinesh Bake House, No 180, Jaffna Road, Mannipay 021 222 2570 021 222 3297



### தவறிவிட்டது

அளவெட்டியைச்சேர்ந்த ஐயாத்துரை நவரத்தினம் என்பவரது தேசிய அ.அட்டை (430862154V), விசேட அ.அட்டை என்பன 26.01.2009 அன்று மருதனார் மடத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பிள்ளையார் வீதி, அளவெட்டி மத்தி, அளவெட்டி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொ.பே: 0773506374 (சி/557026)


## குடாநாட்டுக் கடற்பரப்புகளில் வெளிநாட்டுப் பறவை இனங்கள்

### அவற்றை உண்ணவேண்டாமென எச்சரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.4

யாழ். மற்றும் தீவகக் கடற்பரப்புகளில் தற்போது பெருந் தொகையான வெளிநாட்டுப் பறவையினங்கள் வந்து குவிவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

பறவைக் காய்ச்சல் நோய்பரவும் அபாயம் உள்ளதால் கடற்பரப்புக்கு வரும் இந்த வெளிநாட்டுப் பறவைகளைப் பிடித்து உண்ண வேண்டாம் என யாழ்.சுகாதாரப்பகுதியினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்.மற்றும் தீவகக் கடற்பரப்புகளில் மீனவர்களின் மீன்பிடி வலைகளில் பெருமளவான வெளிநாட்டுப் பறவையினங்கள் சிக்குண்டு வருகின்றன. இந்தப் பறவைகள் ஒவ்வொன்றும் மூன்று கிலோவிற்கு மேற்பட்டவையாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தீவகப் பகுதியில் சந்தைகளிலும், வீதிகளிலும் இந்தப் பறவைகள் இறைச்சிக்காக விற்பனை செய்யப்படுவதைக் காண முடிகின்றது. இந்த வெளிநாட்டுப் பறவையினங்கள் பறவைக் காய்ச்சல் நோயைத் தோற்றுவிக்கக்கூடியவை என்றும், இவற்றை உண்பதைத் தவிர்க்குமாறும் சுகாதாரப் பகுதியினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (50-95)

## 60 ஆவது அகவை நிறைவு நல்வாழ்த்தும் சேவை நயப்புரையும்



## இராசையா இராசலிங்கம்

(கிராம சேவையாளர் (J/112) திருநெல்வேலி தென் கிழக்கு)

இன்று 04.02.2009 தனது 60 ஆவது அகவை காணும் எமது பெருமதிப்புக்கும் அன்புக்குமுரிய கிராமசேவையாளர் இராசையா இராசலிங்கம் அகவை நூறு நிறைவு கண்டு பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

கடமையுணர்வும், துணிச்சலும், திறமையும், நேர்மையும் ஒருங்கே சேர்ந்த மக்கள் சேவையாளனின் தன்னிகரற்ற சேவைக்காக எமது மக்கள் சார்பாக பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஞானவைரவர் சனசமூக நிலையம், முடமாவடி.

## நிறைவே உன் சேவையில் நினைக்கின்றோம்



ஆசிரிய சேவையில் அடிவைத்து முப்பத்திரெண்டு ஆண்டில் ஐந்து வருடங்கள் எம்மோடிணைந்து ஏழைப் பிள்ளைகளை ஏற்றி இதயத்தால் இயைந்து வாழ்ந்த

**திருமதி இந்திராதேவி ஜெயசிங்கம்**

(மனைப் பொருளியல் ஆசிரியை)

நித்தமும் சிரித்த முகம், நிம்மதி கூறும் வார்த்தை
மெத்தவே கதைத்திடாது மெச்சிட வாழ்ந்தாயம்மா!
உத்தமி உன் நினைவு சந்திரோதயத் தாயாள் நெஞ்சில்
முத்தென நிலைக்குமம்மா! முழுவதும் பெற்று வாழ்க! என வாழ்த்தும்

யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை, உரும்பிராய்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகத்தினர்.


## COMPUTER EXPRESS

### Institute of Information Technology

No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250

Branch : #07, Kanpollai Lane, Kodikamam Rd, Nelliyadi

O/L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான புதிய பிரிவுகள்

மாபெரும் கட்டணக்கழிவுடன் ஆரம்பமாகின்றது

மாபெரும் புலமைப்பரிசில்திட்டம் – 2008 80% OFF

நெல்லியடியிலும் நாமே!...

- Diploma in Microsoft Office – 3 Months – 1500/=
- Diploma in Desktop Publishing – 4 Months – ~~10000~~ 2000/=
- Diploma in Web Page Designing – 3 Months – ~~10750~~ 2150/=
- Diploma in Graphic Designing – 4 Months – ~~10750~~ 2150/=
- Diploma in Hardware Engineering – 3 Months – ~~10000~~ 2000/=
- Diploma in Auto CAD – 3 Months – ~~10000~~ 2000/=
- Diploma in Accounting Package – 3 Months – ~~10750~~ 2150/=
- Diploma in Computer Science – 4 Months – ~~10750~~ 2150/=
- Honors Diploma in Computer Science – 3 Months – ~~13000~~ 2600/=

50% Off Advance Courses

| | |
|---|---|
| Dip. in. Multimedia | 2750 |
| Dip. in. Video Editing | 3250 |
| Dip. in. Networking | 5000 |

FEB 25 ம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்துகொள்ளவும்.


யாழ்நகரில் ஆரம்பம்

Batch I: 06/02/2009
Batch II: 07/02/2009
Batch III: 08/02/2009
Batch IV: 11/02/2009
09.00AM

நெல்லியடியில் ஆரம்பம்

Batch I: 05/02/2009 - 09.00
Batch II: 07/02/2009 - 11.00
Batch III: 08/02/2009 - 11.00
Batch IV: 10/02/2009 - 09.00


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org







யாழ்.மத்திய கல்லூரி, சுவிஸ் பழைய மாணவர் மன்றத்தின் அனுசரணையுடன் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் 3ஏ சித்தியடைந்த மாணவர்கள் மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு நடத்திய பரிசளிப்பு நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் நேற்று நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

கல்லூரி முதல்வர் எல்.ஓங்காரமூர்த்தி தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்குவதை முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.

உதவி அதிபர் ச.பத்மநாதன் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவி ஒருவருக்கும் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவனுக்கும் பரிசில்கள் வழங்குவதை அடுத்துள்ள இரண்டு படங்களிலும் காணலாம்.

நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களை ஐந்தாவது படத்தில் காணலாம்.

(படங்கள்: லக்ஷ்மன்)

# கடை உடைத்துத் திருடிய இருவருக்கு 3 வருட க்டூழியச் சிறைத்தண்டனை

மந்திகை,பெப்.4

உடுப்பிட்டியில் உள்ள விற்பனை நிலையம் ஒன்றை இரவு வேளையில் உடைத்துத் திருடியவர்கள் என்று சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இருவருக்குப் பருத்தித்துறை நீதிமன்றம் மூன்று வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

கம்பர்மலை, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஜெயராஜா ராஜேஸ்வரன், விக்னேஸ்வரலிங்கம் விஜயகரன் ஆகியோர் மீது இந்த விடயம் தொடர்பாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

இவர்களைக் கைதுசெய்த வல்வெட்டித்துறைப் பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்திருந்தனர்.

இவ்வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதிபதி கே.அரியநாயகம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வந்தது.

விற்பனை நிலையத்தை உடைத்து திருடியதற்கு ஒவ்வொருவருக்கும் ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனையும், திருடிய பொருள்களை வைத்திருந்ததற்கு 2 வருடங்கள் கடூழியச் சிறைதண்டனையும் விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(203-218)

## இலவச தையல் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தால் இலவச தையல் பயிற்சி நெறி நடத்தப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் இணைய விரும்புவோர் சங்கானை பட்டினசபை வீதியில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203-112)

## பெண்கள் வாரம் அனுஷ்டிப்பு

வடமராட்சி,பெப்.4

மெதடிஸ்த திருச்சபையின் பருத்தித்துறை - கட்டைவேலி சேகரப் பிரிவில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தொடக்கம் பெண் கள் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

எதிர்வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையுடன் பெண்கள் வார நிகழ்வுகள் நிறைவடையும் என மெதடிஸ்த திருச்சபைக்குரு அருள்திரு என்.அருள்நாதன் தெரிவித்துள்ளார்.

(203-236)

## புலமைப் பரிசில் பரீட்சைக்கான இலவச வகுப்புகள்

வண்ணை,பெப்.4

குருநகர், சமூக அபிவிருத்திக்கான இணையத்தால் 5ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான இலவச வகுப்புகள் இன்று புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

அதேவேளை இணையத்தால் கிழமை நாள்களில் திங்கட்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை மாலை 4 மணியில் இருந்து 6 மணிவரை பாடசாலை மாணவ மாணவிகளுக்கு இலவச கற்பித்தல் நடவடிக்கைகளும் நடத்தப்பட இருக்கின்றன.

(1-160)

# இரண்டு தசாப்த காலத்திற்குப் பின் உயிரியல் துறைக்கு மத்திய கல்லூரியில் இருந்து 15 மாணவர்கள் தெரிவு

யாழ்ப்பாணம்,பெப்.4

யாழ்.மத்திய கல்லூரியில் இரண்டு தசாப்த காலத்திற்குப் பின் இம்முறை உயிரியல்துறையில் 15 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியுள்ளனர்.

கடந்த வருடம் இடம்பெற்ற உயர் தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் ஒப்பிட்டு ரீதியில் யாழ்.மத்திய கல்லூரியில் வர்த்தகத்துறை, கலைத்துறை ஆகியவற்றிலிருந்தும் வழமையை விட அதிகளவிலான மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெறக்கூடிய வாய்ப்புள்ளது.

அத்துடன் உயிரியல் துறையில் இரு தசாப்த காலமாக வருடந்தோறும் இரண்டு அல்லது மூன்று மாணவர்களே பல்கலைக்கழக அனுமதியைப் பெற்று வந்துள்ளனர்.

இம்முறை முதன்முறையாக யாழ். மத்திய கல்லூரியிலிருந்து உயிரியல் துறையில் 15 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ளார்கள் என்று கல்லூரியின் பிரதி அதிபர் எஸ். பத்மநாதன் தெரிவித்தார். (9)

## மாணவர் விடுதிக்கு புதியோரை இணைத்துக் கொள்ள நேர்முகத் தேர்வு

கொழும்பு, பெப்.4

அகில இலங்கை இந்துமாமன்றத்தின் இரத்மலானை மாணவர் விடுதிக்கு புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 9ஆம் திகதி பி.ப. 4 மணியளவில் கொழும்பு-04, பம்பலப்பிட்டி, லோறன்ஸ் வீதி எனும் முகவரியில் 75ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் தனித்தனியாக விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் பிறப்புச் சான்றிதழ் மற்றும் உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு இந்து மாமன்ற பொதுச் செயலாளர் க.நீலகண்டன் கேட்டுள்ளார்.

(9)

## பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,பெப்.4


தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த பங்கீட்டு அட்டைகள் மீளாய்வுகள் தவிர்க்க முடியாத காரணங்களினால் எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறுமென பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார். (203-207)

## நெடுந்தீவு சனசமூகநிலையம் இடம்மாற்றப்பட்டது

நல்லூர், பெப்.4

நெடுந்தீவு கிழக்கு சனசமூக நிலையம் மெச்சன் வளவு பகுதியில் உள்ள கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக நெடுந்தீவு மாவிலி துறைமுகப் பகுதியில் இயங்கிவந்த இந்த நிலையம், துறைமுகப் பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக மாற்றப்பட்டதைத் தொடர்ந்து தற்சமயம் இடம் மாற்றப்பட்டுள்ளது. (203-111)




சித்தங்கேணி,பெப்.4

மூளாய் கிழக்கு பொற்புலம்பதி மஹாகாளியம்பாள் மகாகும்பாபிஷேகம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 7 மணி முதல் 8 மணிவரை நடைபெறவுள்ளது.

மேற்படி ஆலய கும்பாபிஷேகக் கிரியைகளும் சாந்தி வழிபாடுகளும் இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று மறுநாள் வியாழக்கிழமை காலை 7 மணிக்கு எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

(201-112)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.4

கோண்டாவில் கிழக்கு பழைய காளி கோயில் என விளங்கும் சிவமஹாகாளி அம்பாள் தேவஸ்தான சங்காபிஷேகம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (201)

வடமராட்சி,பெப்.4

யாழ்.குடாநாட்டிலுள்ள கத்தோலிக்க யாத்திரைத் தலங்களில் ஒன்றான பருத்தித்துறை தும்பளை லூர்த்து மாதா ஆலய வருடாந்த உற்சவம் நேற்றுமுன்தினம் 2ஆம் திகதி கொடி யேற்றத்துடன் ஆரம்பமானது.

தினமும் இடம்பெறும் நவநாள் ஆராதனையைத் தொடர்ந்து எதிர் வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை நற்கருணை வழிபாடு நடைபெறும். மறுநாள் 11ஆம் திகதி புதன்கிழமை காலை பருத்தித்துறை பங்குத் தந்தை அருட்திரு பெர்னாட் றொக்னோ அடிகளார் தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். தொடர்ந்து திருச்சொரூப பவனியும் நடைபெறும்.

(50-236)




சித்தங்கேணி, பெப்.4

பண்டத்தரிப்பு சாந்தை சிற்றம்பலம் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெவன்மைப் போட்டி நாளை வியாழக்கிழமை வித்தியாலய அதிபர் கே.அன்ரன் மரியதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யுஎன்டிபி நிகழ்ச்சித்திட்ட அலுவலர் கு.வி. நிஷாந்தனும் சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற அதிபர் ஸ்ரீசுதந்திரனும் கலந்து கொள்வர். (201-112)

* * *

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் வி.சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மக்கள் வங்கியின் பிராந்திய பொது முகாமையாளர் சிற்றம்பலம் சுந்தரலிங்கம் கலந்துகொள்வார். போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி பத்மாசனி சுந்தரலிங்கம் வழங்குவார்.

(201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**இலங்கை வெளிவாரிப் பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகு**

**வெளிவாரிப் பரீட்சை - 2007**

**பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி-II-2004 & 2005(வெளிவாரி) செய்முறைப் பரீட்சை (EX.DTAG.3.2) நாடகமும் அரங்கியலும்**

மேற்படி தேர்வுக்கான செய்முறைப் பரீட்சையை 07.02.2009 (சனிக்கிழமை) மற்றும் 08.02.2009 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள கைலாசபதி கலையரங்கில் காலை 8.30 மணிக்கு நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

*03.02.2009* *பதில் பதிவாளர்.*


## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**கந்தையா சத்தியசீலன்**

தாய் மடியில்
05.12.1950

இறைவன் அடியில்
04.02.2002

ஆண்டேழு சென்றாலும் ஆறாத துயரில்
அலைமோதும் உம் உறவுகள் இங்கே
ஆறாத துயரில் அவதியுற்று நிற்கின்றோம்
உம் நினைவுகள் என்றும் எம்முடன்

டச்சு வீதி,
சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

உங்கள் நினைவில்:
தாய், மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்.

(82414)

## முதலாம் ஆண்டு நினைவுதனில் அஞ்சலிக்கின்றோம்

மலர்வு
23 ★ 09 ★ 1949



உதிர்வு
04 ★ 02 ★ 2008

**வெலிச்சோர் ஜேசுதாசன்**

(முன்னாள் காசாளர்-ப.தெ.வ.அ.கூ.சங்க சமாசம், யாழ்ப்பாணம்)

உம் மீள் துயில் தனிலே
ஈர் ஆறு மாதங்கள்
உருண்டோடிப் போனாலும்
உதிராது உம் நினைவு-எம்
இதயம் தனில் இருந்து

சந்திரபுரம்,
மட்டுவில் வடக்கு,சாவகச்சேரி.

ஜே.மேரிவனஜா (மனைவி),
ஜே.பார்த்திபன் (மகன்).

(82408)

## உரும்பிராய் மீன் எழுச்சித்திட்ட அலுவலகம் திறந்து வைப்பு

இணுவில்,பெப்.4

வலி.கிழக்கு பிரதேசத்திற்கு உட்பட்ட உரும்பிராய் கிராமத்தில் சமூகத்தைக் கட்டியெழுப்பும் அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித்திட்ட அலுவலகம் ஒன்று உரும்பிராய் சரஸ்வதி சனசமூக நிலைய மண்டபத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நிலையத் தலைவர் க.அருந்தவராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அமைச்சின் திட்டப் பணிப்பாளர் பி.எச்.சுகததாச பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அலுவலகத்தை நாடா வெட்டித் திறந்து வைத்தார். (203-45)

## பெத்தாச்சி அம்மன் ஆலய பகுதிக்கு மின்சாரம்

மானிப்பாய்,பெப்.4

கடந்த 50 வருடங்களுக்குப் பின்னர் நவாலி வடக்கு-பெத்தாச்சி அம்மன் ஆலய பகுதிக்கு மின்சாரம் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு வருகின்றது.

சுன்னாகம் மின்சார சபையினர் இதற்கான துரித நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளனர்.

நவாலி வடக்கு-இருதயர் ஆண்டவர் ஆலய பகுதியில் இருந்து பெத்தாச்சி அம்மன் ஆலய பகுதி வரையிலான பகுதிக்கு 17 மின்கம்பங்கள் நடப்பட்டு மின் வழங்கப்படவுள்ளது. (203-95)

## வணிகபீடத்தின் விரிவுரைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.4

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் 2007/2008 கல்வியாண்டு மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 25ஆம் திகதி புதன் கிழமை ஆரம்பமாகவுள்ளதாக பதிவாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை 2ஆம், 3ஆம், 4ஆம் ஆண்டு சிரேஷ்ட மாணவர்கள் புதிய கல்வியாண்டுக்கான மீள் பதிவுகளை மேற்கூறப்பட்ட திகதியில் இருந்து மேற்கொள்ளுமாறு பதில் பதிவாளர் அறிவித்துள்ளார். (203-201)

### தவறிவிட்டது

372, நாவற்குழி, கோவிலாக்கண்டி என்னும் முகவரியுடைய ஜெகநாதன் பேரானந்தம் என்பவரின் தே.அ.அட்டை(582952655V) 01.02.2009 ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் குறிப்பிடும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

திரு.திருமதி பேரானந்தம் (சங்கீத ஆசிரியை)
நாமகள் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.


# Vacancy

## Chief Executive Officer

**Qualifications:**

1. Must be a Graduate/Diploma with Experience in Similar Capacity
2. Experience in Administration/Coordination work with Government and Non Government Organizations
3. Fluent in all Three Languages
4. Willing to Travel to other Districts
5. Age below 50 years
6. Capable of writing Project Reports will be an added advantage for the selection.

Apply to (Within 07 Working Days):-
**Chairman,**
**Chamber of Commerce and Industries of Yarlpanam,**
**175, Point Pedro Road,**
**Anaipanthi.**
**Tel.: 0212226609** (C/557022)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
16 ★ 02 ★ 1918

மறைவு
05 ★ 01 ★ 2009

**அமரர் செல்லப்பா நல்லதம்பி**

எமது குடும்பத் தலைவரின் பிரிவுத் துயரில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் தொலைபேசி, தந்தி, தபால் மூலம் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதுடன் இன்று (04.02.2009) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

ஏழாலை வடக்கு,
ஏழாலை.

என்றும் நினைவுடன்:
குடும்பத்தினர்.

(84429)


# IDM நாளை யாழ் நகரில்...

**DIGITAL Solutions (Pvt) Ltd**

(Member of IDM Group of Companies)

**Time: 9.00a.m.**

**Venue : IDM Digital Solutions (pvt) Ltd.**
**114, Navalar Road, Jaffna.**

**All IT Solutions Under One Umbrella**

- ICT Training Solutions
- Business Solutions
- Hardware Solutions
- IT Care Solutions
- Network & Security Solutions

**114, NAVALAR ROAD, JAFFNA.**
**www.idmdsolutions.com** **T.P No 0212224142**


## வாழ்வாதாரத் திட்டத்திற்கு கைதடி மேற்கு கிராமம் தெரிவு

யாழ்ப்பாணம்,பெப்.4

மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள நிலைத்து நிற்கும் வாழ்வாதார செயற்றிட்டத்திற்கு தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த கைதடி மேற்கு கிராம அலுவலர் பிரிவு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து பிரதேச செயலக கிராம அபிவிருத்திப் பிரிவினரால் அப்பகுதியில் உள்ள குடும்பங்களின் விவரங்களைக் கிராமத்தின் தேவைகள் கணிப்பிடும் படிவங்கள் மூலம் திரட்டப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-207)

## தென்மராட்சிப் பகுதியில் சுதந்திர தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,பெப்.4

இலங்கையின் சுதந்திர தின விழா தென்மராட்சி பிரதேச மக்களால் நாளை கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் நடத்தப்படவுள்ளது.

அத்துடன் ஏ-9 வீதியினை பொதுமக்களின் பாவனைக்காக விடுவித்த படையினரைப் பாராட்டும் நிகழ்வும் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வினைத் தொடர்ந்து இரவு கச்சாய் அ.த.க.பாடசாலையில் இன்னிசை விருந்து இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பிரதேசத்தின் அனைத்து இடங்களிலும் சுதந்திர தினத்தையொட்டி தேசியக் கொடிகள் தொங்கவிடப்பட்டுள்ளன. (203-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளை எட்டி யாழ். கல்வித்துறைக்கு புகழ் சேர்த்த மாணவர்கள்!

அண்மையில் வெளியாகிய ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை முடிவுகளில் சிறப்பான பெறுபேற்றினை அடைந்து, யாழ்.மாவட்டத்துக்கும், கல்வித் துறைக்கும் பெருமை சேர்த்த மாணவர்களின் எண்ணங்களை உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதன் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

## சிங்கராசா மேரி தர்மினி
**பெறுபேறு: 3ஏ (அச்சுவேலி மத்திய கல்லூரி)**



நான் தமிழ், அளவையியல், கிறிஸ்தவ நாகரிகம் மூன்று பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளேன். ஐந்து பிள்ளைகளைக் கொண்ட விவசாயக் குடும்பத்தின் மூத்த பிள்ளை. நாம் கல்வி கற்பதற்காக எமது பெற்றோர் படும் கஷ்டங்களை நான் அறிந்திருக்கிறேன். எனவே இவற்றிலிருந்து விடுபடவும் என் சகோதரிகளுக்கு வழிகாட்டவும் நான் படித்தே ஆகவேண்டுமென நினைத்தேன். வெற்றியும் பெற்றேன்.

எனது வெற்றிக்கு மூலகாரணம் எப்போதும் படிப்பதற்கு ஊக்குவிக்கும் பெற்றோர்தான். அத்துடன் எமது பாடசாலை அதிபர் பாலசுப்பிரமணியத்தையும் நான் மறந்துவிட முடியாது. மாணவரின் கல்வி முன்னேற்றம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு பாடசாலைக்காகத் தன்னையே அர்ப்பணித்துப் பணியாற்றுபவர் அவர்.

பாடசாலை ஆசிரியர்களும் எனக்குப் பாடங்களைக் கற்பித்ததுடன் பாடங்களில் ஏற்படும் சந்தேகங்களையும் உடனுக்குடன் தீர்த்து உதவினார்கள். ஆசிரியர்கள் எனக்குச் செய்த உதவிகளை அடுத்த சந்ததிக்கு நானும் செய்வதற்கு ஆசிரியப் பணியை மேற்கொள்ளவேண்டும் என்பதே எனது எதிர்கால இலட்சியம் ஆகும்.

## மங்களேஸ்வரன் கினித்தா
**பெறுபேறு: 3ஏ (நயினாதீவு மகாவித்தியாலயம்)**



யா/நயினாதீவு ஸ்ரீகணேச கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் ஆரம்ப, இடைநிலைக் கல்வியைக் கற்று க.பொ.த சாதாரண பரீட்சையில் 10 பாடங்களிலும் சித்தியடைந்து உயர்கல்வியை நயினாதீவு மகா வித்தியாலயத்தில் தொடர்ந்தேன். இங்கே கலைப்பிரிவில் தமிழ், அரசியல், இந்துநாகரிகம் ஆகிய பாடங்களைக் கற்றேன். எனது வீடு மின்சார வசதியற்றது. இது ஒரு குறையாக எனக்குத் தெரியவில்லை. நான் பல்கலைக்கழகம் செல்ல வேண்டும், எனது குடும்பம் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற ஒரு நோக்கே என்னிடம் இருந்தது. எனது இப்பெறுபேற்றுக்கு முதற்காரணம் பாடசாலை அதிபரும், பாட ஆசிரியர்களும், ஏனைய ஆசிரியர்களும், மேலும் எனக்காக அல்லும் பகலும் உழைத்த எனது பெற்றோருமே. நான் பாடசாலையில் பாடநேரங்களிலும் மற்றும் பரீட்சை நெருங்கிய காலங்களிலும் படிப்பதே எனது வழக்கமாகும். மேலும் கடந்தகால வினாத்தாள்கள் உதவியது. மற்றும் பாட ஆசிரியர்களது அறிவுரைகளைக் கடைப்பிடித்து பாடங்களைக் கற்றேன். எனது நண்பியோடு சேர்ந்தே படித்தேன். இவ்வாறு முயற்சியோடும், தெய்வ நம்பிக்கையோடும் பரீட்சையை எதிர்கொண்டு 3ஏ எனும் பெறுபேற்றைப் பெற்றேன். இது எனது குடும்பத்துக்கே மிகப் பெரிய சந்தோசத்தைக் கொடுத்தது. இதனால் மீண்டும் மீண்டும் எனக்கு ஆரம்பக் கல்வி முதல் உயர்கல்வி வரை கற்பித்து வழிகாட்டிய அனைத்து ஆசிரியர்களுக்கும், அதிபர்களுக்கும், என்னை ஊக்குவித்த என் பெற்றோருக்கும், என்மீது அக்கறை கொண்ட சகோதரர்களுக்கும், உறவினர்களுக்கும், நண்பிக்கும் நான் என்றென்றும் மறவாது நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

மாதா, பிதா, குரு, தெய்வம் - இவர்கள் என் வாழ்வில் பெரும் செல்வம்.

## லோகநாதன் சுலோசனா
**பெறுபேறு: 3ஏ (அம்பன் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன்)**



2008ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 3ஏ எடுத்தமையை இட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். நான் அம்பனில் வசிக்கின்றேன். எனது அப்பா ஒரு சாதாரண விவசாயி. இவ்வாறான ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த எனக்கு பக்கபலமாக இருந்து என்னுடைய கல்விக்கு ஒத்துழைப்பு நல்கி இன்று நான் சிறந்த பெறுபேற்றினைப் பெற உறுதுணையாகத் திகழ்ந்தவர்கள் பெற்றோர்களே. அத்துடன் ஊக்கம் தந்து, உற்சாகம் அளித்தவர்கள் என்னுடைய சகோதரர்கள். எனவே இச்சந்தர்ப்பத்தில் என்னுடைய குடும்பத்தினருக்கு நன்றி கூறுவதில் மனமகிழ்ச்சியடைகிறேன்.

கல்வி கற்பதற்கான வசதிகள் குறைவாகக் காணப்படுகின்ற எமது பிரதேசத்தில் சிறப்பான முறையில் அறிவைப் புகட்டி நல்ல வழிகாட்டல் வழங்கி நான் இந்நிலையை அடைவதற்கு பங்களிப்புச் செய்த அம்பன் அ.மி.த.க. பாடசாலை அதிபர் அவர்களுக்கும் மற்றும் ஏனைய ஆசிரியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்தோடு, கல்வி வளர்ச்சி நோக்கி இப்பிரதேசத்தில் இயங்கும் குடத்தனை கிறிஸ்து நற்தூதுப்பணியகத்தின் பங்களிப்பும் நான் இந்நிலையை அடைவதற்குக் காரணமாக இருந்தது. எனக்குச் சிறந்த அறிவுரைகளை வழங்கி நல்ல முறையில் கல்வி போதித்த இப்பணியகத்தின் இயக்குநர் அவர்களுக்கும் மற்றும் ஏனைய ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இவை அனைத்திற்கும் மேலாக என்னுடைய தன்னம்பிக்கையும், விடாமுயற்சியுமே இச்சிறந்த பெறுபேற்றினைப் பெறுவதற்கு வழிவகுத்தது எனலாம். எனவே தடைகள், குறைபாடுகள் பல இருப்பினும் தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் இருந்தால் எமது இலக்கை அடையமுடியும்.

எனவே இப்பிரதேசத்திலுள்ள மாணவர்களுக்கு நான் கூறிக்கொள்வது தன்னம்பிக்கையும் விடாமுயற்சியுமிருப்பின் கலைத்துறையில் மட்டுமல்ல ஏனைய துறைகளிலும் பாண்டித்தியம் பெற்று விளங்கலாம்.

## வனஜா கதிரவேல்
**பெறுபேறு: 3ஏ (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி)**



ஞானாசாரியார் கல்லூரியில் ஆரம்பக் கல்வியை முடித்து 9ஆம் தரத்தில் வடமராட்சி மத்திய கல்லூரியில் இணைந்தேன்.

நான் உயர்தரத்தில் கலைப்பிரிவில் தமிழ், இந்துநாகரிகம், அளவையியலும் விஞ்ஞான முறையும் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்து மிகவும் தீவிரமாக முயன்று படித்தேன். படிக்கும் நேரங்களில் அடிக்கடி நோய்க்குட்பட்டேன். அத்தகைய நேரங்களில் எனது பெற்றோரும், எனக்குக் கல்வி புகட்டிய ஆசிரியர்களும், எனது நண்பர்களும் எனக்கு உறுதுணைபுரிந்தார்கள்.

நான் தினமும் ஆசிரியர்கள் கற்பித்த பாடங்களை மனப்பாடம் செய்வதுடன், கடந்த கால வினாக்கள் பலவற்றை மீண்டும் மீண்டும் செய்து பார்த்து அவற்றில் வருகின்ற சந்தேகங்களை ஆசிரியர்களிடம் கேட்பேன். எனது ஆசிரியர்களும் மிகுந்த அன்புடன் விளக்கங்களை வழங்குவார்கள். இரவில் நீண்ட நேரம் விழித்துப் படிப்பேன். நீண்டநேரத்தை நூலகத்திற்கு ஒதுக்கி எனது தேடலைத் தீவிரமாக்கி வெற்றி பெற்றேன்.

பெறுபேற்றை அறிந்தவுடன் முதலில் என்ன செய்வதென்று அறியாமல் அழுதேன். பின்பு சற்று அமைதியாகி அதிபர், ஆசிரியர்கள், நண்பர்கள் அனைவரிற்கும் எனது பெறுபேற்றைத் தெரிவித்தேன்.

பரீட்சையில் நான் எதிர்பார்த்த வினாக்கள் வந்தன. அதனால் எனக்கு நேரச்சிக்கல்கள் ஏற்படவில்லை. என்னால் பரீட்சைக்கு ஏற்ற நேரத்தில் விடைகள் எழுதக்கூடியதாக இருந்தது.

இத்தனை தடைகளையும் தாண்டிச் சாதனை புரிந்த நான் பல்கலைக்கழகம் சென்று சிறப்பான முறையில் கற்றுச் சிறந்த விரிவுரையாளராக வந்து ஒடுக்கப்பட்ட மாணவர்களின் கல்வியை உயர்த்துவதற்கு நான் என்னாலான சேவைகளைச் செய்வேன்.

## அப்புக்குட்டி சர்வதீபன்
**பெறுபேறு: 3ஏ (உசன் இராமநாதன் ம.வி.)**



நான் ஒரு கமத்தொழில் செய்யும் வறிய குடும்பத்தில் பிறந்தவன். எனது கிராமம் ''உசனாக'' இருந்தாலும் நான் அங்கிருந்து கல்வியைப் பயில நாட்டு நிலை விடவில்லை. நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாகச் சண்டிலிப்பாயில் அடிப்படை வசதிகளற்ற வீட்டில் குப்பிவிளக்கிலே படிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. எனினும் நான் மனம் தளரவில்லை. எனது வீட்டு நிலைமை, எனது அண்ணா வணிகப் பிரிவில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காமை என்பனவற்றை மனதில் இருத்தி 3ஏ பெறவேண்டும் என்ற வெறியில் படித்து அப்பெறுபேற்றைப் பெற்றுக் கொண்டேன். இப்பெறுபேற்றைப் பெறுவதற்கு எனக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்தோரில் முதன்மையானவர்கள் எனது பெற்றோரும் எனது சகோதரர்களுமே ஆவர். மேலும் எனது பாடசாலை, நான் தெரிவுசெய்த தனியார் கல்வி நிலையமும், எனது நண்பனும் நான் இப்பெறுபேற்றைப் பெற வழிவகுத்தனர். எனது பாடசாலையான யா/உசன் இராமநாதன் மகாவித்தியாலயம் இடம் பெயர்ந்து அடிப்படை வசதிகளற்ற இடத்தில் இயங்கினாலும் எமது பாடசாலை அதிபர் உயர்திரு. மனோகரன் அவர்களும் பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் மனம் சோராது மாணவர்களுக்குச் சிறந்த கல்வியைக் கொடுத்தனர். அதில் அனைவரும் சிறந்த பலனைப் பெற்றோம். அதில் நானும் ஒருவன் என்பது எனக்கும் பாடசாலைக்கும் பெருமை தரும் விடயமாகும்.

நான் இடம்பெயர்ந்து படித்துக் கொண்டிருந்ததால் தனியார் கல்வி நிலைய நிர்வாகியும், தமிழ் ஆசிரியரும் எனக்குப் பாடசாலையைப் போல் இலவசக் கல்வியைப் போதித்தனர். இதனால் நான் 3ஏ பெறவேண்டும் என்ற இலட்சிய வெறியுடன் படித்தேன். நான் 3ஏ பெறுபேற்றைப் பெற வழிவகுத்த இன்னோர் அடித்தளம் சங்கானை நூலகமும் அங்கு பணிபுரியும் ஊழியர்களுமாவர். நான் அங்கு எனக்குத் தேவையான புத்தகங்கள் அனைத்தையும் எடுத்து அவ் அமைதியான சூழலில் கற்க வசதியைத் தந்தது அந்த நூலகமே ஆகும்.

எனது எதிர்கால இலட்சியம் சட்டக் கல்வி பயின்று அனைவருக்கும் நல்ல சேவையாற்ற வேண்டும் என்பதேயாகும்..

## சிவனேந்திரன் குபிதா
**பெறுபேறு: 3ஏ (அம்பன் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன்)**



யாழ்.மாவட்டத்தில் வடமராட்சி கிழக்கின் பருத்தித்துறை, மருதங்கேணி வீதியில் அமைந்துள்ள பின்தங்கிய கிராமங்களில் ஒன்றான அம்பன் கிராமத்தில் வசித்து வருகின்றேன். இங்கு இயங்கிவரும் யா/அம்பன் அ.மி.த.க. பாடசாலையிலேயே தரம் 1 முதல் உயர்தரம் வரை கற்றேன். கடந்த 2003ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர கலைப்பிரிவு தற்காலிகமாக எமது பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டு இருந்தாலும் இதுவரை காலமும் வேறு பாடசாலைகளுடன் இணைந்தே எமது மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றினார்கள். நான் பரீட்சைக்குத் தோற்றிய இவ்வாண்டே எமது பாடசாலை உயர்தரப் பாடசாலையாக மாற்றப்பட்டது. இதற்குக் காரணமாக இருந்தவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எமது பாடசாலையில் க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தியெய்திய மாணவர்கள் பலர் நகர்ப்புறப் பாடசாலைகளுக்குச் சென்று உயர்தரம் கற்பது வழமையாக இருந்தது. வளம் குறைந்த பின்தங்கிய எமது பாடசாலையில் இருந்து சிறந்த பெறுபேற்றினைப் பெற்றுக் கொள்ளமுடியாது என்ற தப்பான அபிப்பிராயம் பலரிடம் இருந்தது. இந்த நிலையை மாற்ற வேண்டும் என்ற ஆதங்கத் தோடு முழுமூச்சாகக் கல்வியில் கவனம் செலுத்தினேன். மின்சார வசதியற்றபோதும் குப்பிவிளக்கில் படித்துச் சிறந்த பெறுபேறான 3ஏயினைப் பெற்றுள்ளேன்.

நான் படிக்கும்போது சுருக்கக்குறிப்பு எடுத்துப் படித்தமையால் எனக்கு இலகுவாக இருந்தது. எந்தப் பாடத்தையும் தெரிவு செய்து படிக்கவில்லை. எல்லாப் பாடங்களையும் முழுமையாகவே படித்தேன். இதனால் பரீட்சையைப் பயமின்றி எதிர்கொள்ள முடிந்தது. அத்தோடு எமது வகுப்பில் படித்த மாணவர்கள் அனைவரும் போட்டியுடன்தான் படித் தார்கள். இதனால் நான் 3ஏ எடுப்பதற்கு இதுவும் ஒரு தூண்டுகோலாக அமைந்தது.

இவ்வெற்றிக்குக் கடவுளின் அருளும், என் பெற்றோரின் அன்பும், உறுதுணையும் உந்து சக்தியும் வித்திட்டன. எமது பாட சாலை அதிபர் பொ. சிவராசா அவர்களின் ஆலோசனையும், வழிகாட்டலும் எனது முயற்சிக்குத் தூண்டுகோலாய் அமைந்ததோடு எமக்குவாய்த்த ஆசிரியர்கள் பெரும் வரப்பிரசாதம் என்றே கூறவேண்டும். து. அருந்தவசீலன், ஆ. பவனந்தி ஆகிய ஆசிரியர்கள் குறிப்பிட்டுக் கூறக்கூடியவர்கள். கிறிஸ்து நற்தூதுப் பணியகக் குருமுதல்வர் அருட்பணி ராஜன்றொகான் எனக்கு கல்வி போதித்த ஆசிரியர்கள், நண்பர்கள் இவர்கள் அனைவரினதும் அறிவுரைகளும், உதவிகளும்தான் நான் இந்நிலைக்கு வருவதற்குக் காரணமாய் அமைந்தது. குறைந்த வளங்களுடன் சிறப்பாக இயங்கிவரும் எமது பாடசாலைக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கும்போது இனிவரும் மாணவர்களும் பெரும் சாதனை படைப்பார்கள். எனவே இதற்கான வசதிகளை உரியவர்கள் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்பதே எனது விருப்பம்.

சந்திப்பும், படங்களும்:
ஔண்யன், கவிநேசன்,
ம.பா.மகாலிங்கசிவம்,
கர்ணன், லக்ஸ்மன்
11

## சிறிஸ்காந்தன் சருபன்
**பெறுபேறு: 2ஏபி (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி)**



உயர்தரத்திலே தமிழ், நாடகமும் அரங்கியலும், பொருளியல் ஆகிய பாடங்களைத் தெரிவுசெய்தேன். ஆரம்பத்தில் கணிதத்துறையினைத் தேர்ந்தெடுத்துப் படித்தேன். ஆனால் எனது குடும்பத்தின் பொருளாதார நிலைமை மோசமானதால் கலைத்துறையினைச் சூழ்நிலைக்கேற்ற வகையில் மாற்றிக்கொண்டேன்.

ஐந்து பெண் சகோதரிகளுக்கு நான் ஓர் ஆண்பிள்ளை. சின்னக்குடிசையில் தான் வசித்து வருகின்றேன். அது கூட கடந்த ''நிஷா'' புயலினால் ஆட்டம் கண்டு தடுமாறியது.

3ஏ பெறுபேற்றினை எதிர்பார்த்தேன். இத்தகைய பெறுபேறு கிடைத்தது பெரும் ஏமாற்றமாக இருந்த போதிலும் மாவட்ட நிலை 47 என்றதும் மனதில் ஒருவித சந்தோஷம்.

எனது குடும்ப வறுமையால் நான் படிப்பது என்பது கேள்விக்குறியாகவே இருந்தது. இருப்பினும் எனது கல்லூரி அதிபர் வ.ஸ்ரீகாந்தன், பிரதி அதிபர் இ.ஆனந்தநடராசா ஆகியோர் எனக்கு ஊக்கத்தினை வழங்கினார்கள்.

அதிலும் குறிப்பாகப் பிரதி அதிபர் எனது கல்வி வளர்ச்சிக்கான முழுச்செலவினையும் தனிப்பட்ட முறையில் கவனித்தார். எதிர்காலத்தில் ஒரு மேன்மையான ஸ்தானத்தில் நான் இருந்தால் எனது ஏணிப்படியாகப் பிரதி அதிபரைத்தான் நினைப்பேன். என் வாழ்வில் என்றைக்கும் மறக்கமுடியாத குருவாக மட்டுமல்ல ஒரு தந்தையாகவும் அவர் என் மனதில் நிலைத்திருப்பார்.

அத்துடன் கல்லூரியின் உப அதிபர் விமலன், ஆசிரியர் குகபரன், ஆசிரியை திருமதி ஹேமலதா ஆகியோரும் எனது கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளனர்.

கல்லூரியில் உதைப்பந்தாட்டம், கரப்பந்தாட்ட அணிகளில் அங்கம் வகித்துள்ளேன். மாகாண மட்டம் வரை எமது அணி வெற்றிபெற்றது. விளையாட்டுத் துறையில் அதிக ஈடுபாடு எனக்கிருந்தது. இதனால் எனது கல்வியின் வளர்ச்சிக்குத் தடை ஏற்படுமா? என உறவினர்கள் அச்சம் கொண்டனர்.

என்னைப் பொறுத்தவரை விளையாட்டுத் துறையில் நான் அதிக ஆர்வம் காட்டியதால் தான் படிக்கவேண்டும் என்ற உத்வேகம் எனக்குள் ஊற்றெடுத்தது.

வீட்டில் அப்பா, அம்மா, அக்காமார் எல்லோரும் உற்சாகப்படுத்தினார்கள். தமது இயன்றளவு பங்களிப்பையும் எனக்கு வழங்கினார்கள். எதிர்காலத்தில் பொருளியல்துறையில் மேன்மையடைய வேண்டும் என எனது எதிர்பார்ப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வீதிகளுக்கு மேலாகத் தற்காலிகமாக அமைக்கப்படும் தெருமூடிப் பந்தலின் நீட்சியாக அமைந்ததே தெருமூடி மடங்கள். இவை தெருவால் செல்லும் மக்கள் இளைப்பாற வேண்டி அமைக்கப்பட்டிருந்தன. படத்தில் காணப்படுவது தும்பளை வீதி, பருத்தித்துறையில் அமைந்துள்ள தெருமூடி மடம். 1898 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கட்டப்பட்டதாகக் கூறப்படும் இதுவே தெருமூடி மடங்களில் இன்று எஞ்சியுள்ள ஒரேஒரு ஆதாரம். இதே காலப் பகுதியில் வதிரி மடத்துப் பிள்ளையார் கோயில், மாலுசந்தி, மந்திகை என்னும் இடங்களிலும் தெருமூடி மடங்கள் அமைந்திருந்தன. எனினும் இன்று அவை இல்லை. எஞ்சியுள்ள இந்த ஒன்றையாவது அழியாது காப்போமா?

(படமும் தகவலும்:சோ.குமுதா)

# வர்ணப் படங்களின் பதிவுப் பெட்டகம்



ஊரெழு, பொக்கணை நீருற்றுக்கு அண்மையில் படத்தில் காண்கின்ற இயந்திர அமைப்பு சிதைவடைந்த நிலையில் உள்ளது. விலங்குகளின் எலும்புகளையும், கழிவுகளையும் இந்த இயந்திரத்தில் அரைத்து அவை கால்நடைத் தீவனங்களாகத் தயாரிக்கப்பட்டன. ஏறக்குறைய 30 வருடங்களுக்கு முன்னர் இந்த இயந்திரத்தின் மூலம் தயாரிக்கப்படும் கால்நடைத் தீவனத்திற்கு குடாநாட்டில் பெரும் மவுசு நிலவியது. இன்று யாருமே சீண்டுவாரற்று தனிமையில் இருக்கிறது இந்த இயந்திரம். ★

(படமும்,தகவலும்:-கலைஞன்)



இந்தப் பூனையும் பால் குடிக்குமா? என்று தமிழில் சொல்லப்படுவதுண்டு. படத்திலே உள்ள பூனை பாலை மட்டுமல்ல, மதுபானத்தையும் குடிக்கவல்லது. ஜேர்மனியில் உள்ள இந்தப் பூனை தினமும் காலையில் மதுபானம் அருந்துவதையே பொழுதுபோக்காகக் கொண்டுள்ளது. சில வேளைகளில் மதுபானம் கிடைக்காவிட்டால் கையில் அகப்பட்ட பொருள்களை தட்டி உடைத்து ஆர்ப்பாட்டம் பண்ணுகிறதாம்.★

தொகுப்பு: ஊரண்யன்



வீட்டினை அழகுபடுத்துவதற்கும் தமது உடைகளைத் தொங்க விடுவதற்கும் மான் கொம்பினைப் பயன்படுத்தும் மரபு முன்னர் நம்மவரிடையே நிலவிவந்தது. தமது வேட்டைத் திறமையை வெளிப்படுத்தவும் ஆடம்பரத்தை அதிகரித்துக் காட்டவும் இந்த மான் கொம்புகள் அழகூட்டும் பொருள்களாக முன்னோரின் வீடுகளில் தொங்கியபடியிருக்கும். இன்றெல்லாம் இவற்றைக் காண்பதே அரிதாகிவிட்டது.

(படமும்,தகவலும்:-[illegible])




வாழ்வியல் செயற்பாடுகளை இலகுபடுத்துவதற்காகப் பல்வேறு பொறிமுறைகளை எம் முன்னோர் கண்டறிந்திருந்தனர். விவசாயத் தேவைக்காகவும், வீட்டுத் தேவைகளுக்காகவும் கிணற்றில் இருந்து நீரைப் பெற்றுக் கொள்வதற்கு எம்மவர்கள் கண்டறிந்த ஒரு பொறிமுறை 'துலா'. பூவரசம் மரத்தால் அமைக்கப்பட்ட ஆடுகாலில் தென்னை அல்லது பனை மரத்தைச் சீவிச் செய்யப்பட்ட துலா பொருத்தப்பட்டிருக்கும். தமிழர் வாழ்வோடு இணைந்திருந்த துலாவும், ஆடுகாலும் மெல்ல மெல்ல மறைந்து வருகின்றன.

(படமும்,தகவலும்:-கலைஞன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறக்கும் அதிசயம்


சீனாவில் உள்ள மேக்லிக் ரயில்

கடிகாரத்தின் முட்களோடு போட்டி போட்டுக் கொண்டு ஓடும் மனிதன் எதிலும் வேகம்......வேகம்...... என்று அதிவேகமாக ஓடிக் கொண்டிருக்கிறான்.

மனிதனின் சிந்தனை வேகத்துக்கு ஏற்ப அவன் பயணம் செய்யும் வாகனங்களின் வேகமும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. அந்தவகையில் மனிதனின் தயாரிப்புகளில் ஒன்றுதான் 'புல்லட்' எனப்படும் அதிவேக பயணிகள் ரயில்.

அதிவேக ரயில்களில் மேக்லிக் ரயில்கள் சீனாவைக் கலக்கிக் கொண்டிருக்கிறது. 70 வருட ஆராய்ச்சியில் உருவான மேக்லிக் ரயில்கள் சராசரியாக மணிக்கு 300 கிலோ மீற்றர் வேகமும், அதிகபட்சமாக 430 கிலோ மீற்றர் வேகமும் செல்லக் கூடியவை.

ஷாங்காய் நகரில் ஓடும் மேக்லிக் ரயிலில் முதலில் பயணம் செய்த பயணிகள் இது ரயிலா? அல்லது விமானமா? என்று ஆச்சரியப்பட்டனர். அந்த அளவுக்கு மேக்லிக் ரயிலின் வேகம் இருந்தது. இதன் வேகத்திறனைப் பார்த்து அசந்து போன பயணிகள் ஆகா அற்புதம், பிரமாதம் என்று புகழ்ந்தனர். அது மட்டுமல்ல அதை 'நிலத்தில் பறக்கும் விமானம்' என்றும் 'இறக்கை இல்லாத விமானம்' என்றும் பாராட்டினார்களாம்.

மின் காந்த விசை மூலம் ரயிலைத் தண்டவாளத்தில் இருந்து மேல் நோக்கி உயர்த்தி மிதந்து செல்லும் (பயண) முறைக்கு மேக்லிக் முறை என்று பெயர். ஜேர்மன் நாட்டு பொறியியல் நிபுணர்களின் அற்புதமான கண்டுபிடிப்புக்களில் ஒன்றுதான் மேக்லிவ் ரயில். மேக்லிவ் தொழில்நுட்பம் மற்ற அதிவேக ரயில்களைவிட பல மடங்கு மேலானது. அந்தரத்தில் மிதந்து செல்வதால் மற்ற ரயில்களைப் போல் தண்டவாளத்திற்கும் சக்கரத்திற்கும் நேரடித் தொடர்பு கிடையாது என்பதால் ஓடும்போது உராய்வு விசையால் ஏற்படும் ஆற்றல் இழப்புக் கிடையாது. ஓடும்போது ஏற்படும் இரைச்சல்களும் மிகவும் குறைவு. அதுமட்டுமல்ல ஏனைய அதிவேக ரயில்கள் ஒரு குறிப்பிட்ட தூரத்தைக் கடக்கத் தேவைப்படும் சக்தி, திறன் மேக்லிக் ரயில்களோடு ஒப்பிட்டால் மிகவும் குறைவு.

இவ்வளவு பயன்கள் இருந்தாலும் பொருளாதார சிக்கன வழிகளில் இது மிகவும் பின் தங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மற்றும் பிற அதிவேக ரயில்கள் தினமும் பல்லாயிரக்கணக்கான பயணிகளை ஏற்றிக்கொண்டு செல்கிறது. பாதுகாப்பு விஷயங்களிலும் மிகவும் மேம்பட்டுத் திகழ்கிறது. இந்த மேக்லிக் ரயில்களை இயக்கத் தேவைப்படும் அடிப்படை வசதிகளைப் புதிதாக அமைக்க வேண்டும். இதனால் பொருளாதாரச் செலவுகள் ஏற்படுகின்றன. ஆனால் மற்ற அதிவேக ரயில்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள தண்டவாளங்களை இயக்கமுடியும். இதன் திறனை மேம்படுத்த வேண்டுமென்றால் ரயிலின் வடிவமைப்பை மட்டும் மாற்றி அமைத்தால் போதுமானது.இதன் காரரணமாக மேக்லிக் ரயில்களை அறிமுகப்படுத்தப் பல நாடுகள் தயக்கம் காட்டுகின்றன. நன்றி:சித்தார்கோட்டை ***

# கொழுப்பைக் கரைக்க இசையை ரசிப்போம்



உடலில் உள்ள கொழுப்பைக் கரைக்கவும், இதய பாதுகாப்பிற்கும் இசை கேட்பது நல்ல பலனைத் தரும் என்று தெரியவந்துள்ளது.

இதய நோயாளிகள் தங்களுக்குப் பிடித்தமான இசையைத் தினமும் சுமார் அரைமணிநேரம் கேட்டால், அவர்களின் மனம் அமைதி அடைவதுடன் உடல் ரீதியிலான ஆரோக்கியமும் ஏற்படுவதாக ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.


இசையை ரசிப்பதால் இரத்த நாளங்கள் விரிவடைவதுடன் சுத்தப்படுத்துவதாகவும் அந்த ஆய்வு கூறுகின்றது. இசை கேட்பதால், இதய பாதிப்பின்றி இருக்கவும், கொழுப்பின் அளவு குறையவும் வாய்ப்பு உள்ளதாக அந்த ஆய்வு கூறுகிறது.

இசை கேட்கும் சிகிச்சை முறையை அமெரிக்காவில் சில நோயாளிகளிடம் பரிசோதித்ததாகவும், இதனைப் பிரிட்டன் நிபுணர்கள் வரவேற்றுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

மனித உடலில் இசையால் ஏற்படும் விளைவுகள் தொடர்பான ஆராய்ச்சியின் ஒரு பகுதியாக இது அமைந்துள்ளது. 18 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிம்பொனி இசை மனநலத்தை மேம்படுத்தக் கூடியது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ***

புதன் பொய்கை

# நுரையீரல் நோயால் மனச்சோர்வு அதிகரிக்கும்



நுரையீரல் பாதிப்பு உடைய நோயாளிகளுக்கு மனக்கவலை ஏற்படும் வாய்ப்புகள் அதிகம் என்று தெரியவந்துள்ளது. Chronic obstructive pulmonary disease (COPD) எனப்படும் நுரையீரல் தொடர்பான நோய் உடையவர்களுக்கு ஆரோக்கியமான உடல்நலம் அல்லது சர்க்கரை நோய் உள்ளவர்களைக் காட்டிலும் மனக்கவலை - மனச்சோர்வு ஏற்படும் வாய்ப்புகள் அதிகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுரையீரல் தொடர்பான நோய் ஏற்படுபவர்களுக்கு மூச்சுத் திணறல் ஏற்படக்கூடும். அதிக சளியுடன் கூடிய இருமல், தும்மல், மூச்சு விடுவதில் சிரமம், நெஞ்சுப் பகுதியில் இறுக்கம் உள்ளிட்ட அறிகுறிகள் ஏற்படலாம். நுரையீரல் நோய்களுக்கு முக்கிய காரணமாக அமைவது புகைப்பிடித்தல் ஆகும்.

நெதர்லாந்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், நுரையீரல் நோய் உடைய 999 பேரிடமும், சர்க்கரை நோயுடன் வாழும் 978 பேரிடமும், ஆரோக்கியமான உடல்நிலை கொண்ட 2,494 பேரிடமும் நடத்திய ஆய்வில் நுரையீரல் பாதிப்புடையவர்களுக்கே மனச்சோர்வு வாய்ப்புகள் அதிகம் இருப்பது கண்டறியப்பட்டது. சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கும், ஆரோக்கியமாக உள்ளவர்களுக்கும் மனச்சோர்வு ஏற்படுவதற்கான அறிகுறிகள் குறைவாகவே இருப்பது கண்டுபிடிக் கப்பட்டது. ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்டவர்களின் வயது, சமூகப் பொருளாதார நிலை, அவருக்கு உள்ள இதர நோய், ஆணா? அல்லது பெண்ணா? என்பன போன்றவை குறித்தும் ஆய்வு நடத்தப்பட்டுத் தகவல்கள் திரட்டப்பட்டது. ***

# உலகங்களின் இடிமுழக்கம்



1939 கோடைக்கால இறுதி யில் பல அமெரிக்க பௌதிக விஞ்ஞானிகளின் வற்புறுத்தலின் பேரில் ஐன்ஸ்டீன் ஜனாதிபதி ரூஸ்வெல்டுக்கு ஒரு முக்கிய அந்தரங்கக் கடிதம் எழுதினார். ஓர் அணுகுண்டை உருவாக்குவதற்குப் பரந்த அளவில் பரிசோதனைகள் நடத்த வேண்டிய அவசியத்தை அக்கடிதத்தில் அவர் வற்புறுத்தியிருந்தார். அணுகுண்டு பூதத் தின் பிறப்பிற்கு அதுவே காரணமாயிற்று.

அமெரிக்காவில் அணுகுண்டு தயாரிக்கும் திட்டத்திற்கு 'மான் ஹாட்டன் திட்டம்' என்ற குறியீட்டுப் பெயர் இடப்பட்டது. 1942 ஆம் ஆண்டு கோடையில் இத்திட்டத்தை இராணுவத்திடம் ஒப்படைத்தார்கள். அணுபௌதிகத்துடன் எவ்வகையிலும் சம்பந்தப்படாத படைப்பிரிவைச் சேர்ந்த பிரிகேடியர் - ஜெனரல் குரோவ்ஸ் இத்திட்டத்திற்குப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார்.

அணுகுண்டை உருவாக்கும் பணிக்கு வழிகாட்டும்படி 1942 இல் பௌதிக விஞ்ஞானியான ஒப்பன் ஹீமரை ஜெனரல் குரோவ்ஸ் கேட்டுக் கொண்டார். இதற்காக லொஸ் அலரசில் ஒரு விசேட ஆய்வு கூடம் நிர்மாணிக்கப்பட்டது. இந்தப் பணியில் பங்கெடுத்துக் கொள்ளுமாறு மிகவும் தேர்ச்சி பெற்ற பிரபல விஞ்ஞானிகள் அழைக்கப்பட்டனர்.

1945 ஆம் ஆண்டு ஜூலையில் ஐரோப்பாவில் யுத்தம் ஏற்கனவே முடிவடைந்துவிட்ட சமயத்தில், விசேட சாதனங்களை ஏற்றிக்கொண்டு ஏராளமான லொறிகளும் இழுவை வண்டிகளும் லொஸ் அலமோசிலிருந்து கிளம்பின. அவை 450 கிலோமீற்றர் பாலைவனத்தின் வழியாகச் சென்று தொலை தூரத்தில் இருந்த அல்மகோர்டோ எனும் விமான தளத்தை அடைந்தன. முதலாவது அணுகுண்டு சோதனைக்கு அந்த இடம்தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது.



அப்போது தயாராக இருந்த அணுகுண்டு ஜூலை 14 ஆம் திகதி முப்பது மீற்றர் உயர உருக்குக் கோபுரத்தின் மீது மிகமிக ஜாக்கிரதையாக ஏற்றப்பட்டது. மறுநாள் காலை 5.30 மணிக்கு சோதனை நடத்தப்பட்டது.

''அது சூரியோதயம் போல் இருந்தது: விநாடிக்குக் குறைந்த நேரத்தில் ஒரு பிரம்மாண்டமான சூரியன் மூன்று கிலோமீற்றர் உயரத்துக்கு எழுந்து, மேகங்களைத்தொடும் வரை மேலே, இன்னும் மேலே, அதற்கும் மேலே உயர்ந்து சென்றது. வானிலும் பூமியி லும் கண்ணைக் கூசும் ஒளி வெள்ளம் பரவிற்று'' என்று நியூயார்க் ரைம்ஸ் பத்திரிகை நிருபர் லாரன்ஸ் எழுதினார். இவர்தான் அல்மகோர்டோவில் அனுமதிக்கப்பட்ட ஒரே பத்திரிகை நிருபராவார்.



முதலாவது பந்து மேன் மேலும் வளரத் தொடங்கியது; அதன் விட்டம் அதிகரித்துச் சென்றது. விரைவில் அதன் விட்டம் சுமார் ஒன்றரை கிலோ மீற்றர் இருந்தது. சில விநாடிகளுக்குப் பிறகு இந்தத் தீப்பந்து இருந்த இடத்தில் புகைப்படலம் உருவாயிற்று. அது ஒரு நொடியில் 12 கிலே மீற்றர் உயரத்துக்கு விஸ்வரூபமெடுத்து ஒரு பிரமாண்டமான காளான் வடிவத்தைப் பெற்றது. பூமி குலுங்கிற்று; இடி போன்ற ஒலி முழங்கிற்று. இதுவே புதிதாகப் பிறந்த அணுயுகத்தின் முதல் அழுகுரலாகும்.

இந்தச் சோதனை நடைபெற்ற சமயத்தில் உங்களுக்கு எத்தகைய உணர்ச்சி ஏற்பட்டது என்று அணுக்குண்டைப் படைத்தவரான ஒப்பன் ஹீமரைக் கேட்டபோது, பகவத் கீதையிலிருந்து ''நானே மரணம், உலகங்களின் இடிமுழக்கம்'' என்ற சொற்களை மிகவும் துயரத்தோடு கூறினார். - காந்தகுமாரி.

என் இனியவனே
உன்னைக் காண
துடிக்கும் என் கண்கள்
உன் வரவை எதிர்பார்க்கும்
என் இதயம்
உன்னோடு பேச
துடிக்கும் என் உதடு
உன்னையே நினைக்கும்
என் மனது
இவை அனைத்தும்
உனக்கே சொந்தம்
நீ என் மடியில்
மீண்டும் ஒரு முறை
குழந்தையாய்ப் பிறந்திடு

எஸ்.கஜா.
12 ஆம் வட்டாரம்.
நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



எவரெஸ்ட்
பொன்னாங்காணி தைலம்.
நீண்ட மற்றும் அடர்ந்த கூந்தலை வழங்குவதுடன் பீனிசம், தலையிடி, தலைப்பாரம், மூக்கால் நீர் வடிதல், கண்நோ, கண் எரிவு, இளநரை ஆகியவற்றிலிருந்து நிவாரணம் அளிக்கவல்லது
எவரெஸ்ட் மருந்தகம்
உசன், மிருசுவில்.
(அ/556693)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 11 . 05 . 1943



உதிர்வு 06 . 01 . 2009

### அமரர் வீரகத்தி குமாரசாமி

கடந்த 06.01.2009 செவ்வாய்க்கிழமை இவ்வுலக வாழ்வை நீத்த எம் குடும்பத் தலைவர் வீரகத்தி குமாரசாமி அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (05.02.2009) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

"ஞானபதி",
மட்டுவில் தெற்கு,சாவகச்சேரி. (82350) குடும்பத்தினர்.

## கோடா வைத்திருந்தவருக்கு ஒருலட்சத்து 25 ஆயிரம் அபராதம்

மந்திகை, பெப்.4

கசிப்பு உற்பத்திக்காக 450 லீற்றர் கோடாவை வைத்திருந்தவருக்கு ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த பருத்தித்துறை நீதிமன்றம் அபராதப் பணத்தைச் செலுத்தத்தவறின் 15 மாத கடூழியச் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டது.

அல்வாய் வடக்கு, அல்வாயைச் சேர்ந்த கபில்ராஜ் நித்திலா என்பவரே கசிப்பு உற்பத்திக்கான கோடாவுடன் பருத்தித்துறை மதுவரிப் பரிசோதகர்களிடம் அகப்பட்டுக் கொண்டவராவார்.

இவர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதிபதி கே.அரியநாயகம் முன்னிலையில் மதுவரிப் பரிசோதகர்களால் ஆஜர் செய்யப்பட்டார்.

சம்பந்தப்பட்ட நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து நீதிமன்றம் எதிரிக்கு ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் அபராதப்பணத்தைச் செலுத்தத்தவறின் 15 மாத கடூழியச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று உத்தரவிட்டது. மன்றின் உத்தரவின்படி சான்றுப் பொருள் அழிக்கப்பட்டது.

(203-218)

## மலசலகூடம் அமைக்க கரித்தாஸ் உதவி

வண்ணை, பெப்.4

குருநகர் பிரதேசத்தில் வறுமைக் கோட்டுக்குட்பட்ட 9 குடும்பங்களுக்கு மலசல கூடங்களை கரித்தாஸ்- கியூடெக் நிறுவனம் புதிதாக அமைத்து வழங்கியுள்ளது.

ஒவ்வொன்றும் 50 ஆயிரம் ரூபா முதல் 60 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை- தென்மராட்சி, மட்டுவிலைச் சேர்ந்த 8 குடும்பங்களுக்கு கோழிக் குஞ்சுகள் வளர்ப்புக்காக கரிதாஸ்- கியூடெக் நிறுவனம் உதவிகளை வழங்கியுள்ளது.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் 15 குஞ்சுகள் வீதம் சுயதொழில் முயற்சி அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(203-160)

## பட்டப்படிப்பின் டிப்ளோமா அனுமதிப் பரீட்சைகள்

யாழ்.பல்கலைக்கழக ஈராண்டு பட்டப்பின் கல்வி டிப்ளோமா பகுதிநேரம்- 2007/ 2009, முழுநேரம்- 2007/2008 ஆகிய கற்கைநெறிகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான அனுமதிப்பரீட்சைகள் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணிவரை நடைபெறவுள்ளன.

இந்த அனுமதிப் பரீட்சைகள் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளன. விண்ணப்பதாரிகள் ஏற்கனவே தபால் மூலம் பெற்ற பரீட்சை அனுமதி அட்டையுடனும், தேசிய அடையாள அட்டையுடனும் பரீட்சைக்குத் தோற்றுமாறு வேண்டப்படுகின்றனர். மேலதிக விவரங்களுக்கு 0212226714 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பதில் பதிவாளர் கேட்டுள்ளார்.

(203-201)

## அன்னையை வணங்கி நிற்போம்

மண் மகிழ 22 . 10 . 1916



கண் நெகிழ 05 . 01 . 2009

### திருமதி நாகலிங்கம் அன்னம்மா (பொன்னடி)

எம் இனிய மைத்துனரை
பெற்று மகிழ்ந்து பொயரிட்டு
கொஞ்சி அணைத்து
குழைத்து அமுதூட்டி
அவையத்தில் முந்தி இருக்க
நல் ஒழுக்க கல்வி தந்து
சிந்தை கவர நல் வாழ்வு தந்த- தெய்வத்
தாயின் திருவடிகள் வணங்கி நிற்போம்

தங்கையை தயாய் காத்து
தடையிலா அன்பைக் காட்டி
நற்பல பணிகள் செய்து
நானிலம் மதிக்க வைத்து
சுற்றமும் துணையும் பேணி
சுகம் பெறவழிகள் செய்த தாயே!
பெற்றிடும் பெரும் பேறன்றோ
பெற்ற தாய் தன்னில் மேலாம்.

அன்னையின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்:
யாழ்ப்பாணம். மைத்துனர் குடும்பம்.
(82415)

## முதலாம் ஆண்டில் நீங்காத நினைவில்....

### செல்வி அருமைத்துரை ராணுஜா றெகானா

அன்னை மடியில்
21.12.1981

ஆண்டவன் அடியில்
20.02.2008




உயிருக்குள் உன்னை வைத்து
கண்ணின் மணிபோல காத்து வந்தோம்
பாசமுள்ள தாய் தந்தையையும் நேசமுள்ள
அண்ணன்களையும் அண்ணிமார்களையும்
உன் மருமக்களையும் பாதியிலே பரிதவிக்கவிட்டு
காலமெல்லாம் எம்மை கண்ணீரிலே
தவிக்கவிட்டுத் தனியே நீ சென்றதேனம்மா?
வாழ வேண்டிய வருடங்கள் ஆளவேண்டிய
விடயங்கள் ஆயிரமிருக்க எம்மையெல்லாம்
ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு நீயோ
சென்று விட்டாய்! மொட்டாக இருந்த
நீ பூவாகி மலரும் முன் சருகாகி விட்டாயே?
உன் பூ உடல் எம்மைவிட்டுச் சென்றாலும்
எங்கள் உணர்வுகளில் என்றென்றும்
உயிருடன் வாழ்ந்து கொண்டிருப்பாய்
மீண்டும் எம்மிடம் வந்துவிடு தவிக்கின்றோம்
உன் பூ முகம் காண....

என்றும் உன் நினைவுகளுடன்:
அப்பா, அம்மா, அண்ணன்மார்
அண்ணிமார், மருமக்கள்.

பிரதான வீதி
(பஸ்தியன் சந்தி),
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மகளிர் அபிவிருத்தி நிலையத்தினர் யாழ்.மாவட்டத்தில் உள்ள பின் தங்கிய பாடசாலை மாணவர்களுக்கு கல்வி உபகரணங்களை வழங்கியுள்ளனர். உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.ப.நோ.கூ.சங்க கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.
நிகழ்வில் நிறுவனத்தின் பணிப்பாளர் சரோஜா சிவச்சந்திரன் உரையாற்றுவதையும், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், யாழ்.ப.நோ.கூ.சங்க தலைவர் ப.கிரிதரன், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் முதலாவது படத்தில் காணலாம்.
நிகழ்வில் கலந்துகொண்டோரை இரண்டாவது படத்திலும் மாணவி ஒருவருக்கு கல்விப் பணிப்பாளர் கல்வி உபகரணங்களை வழங்குவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.
(படங்கள்: குமார்)

## பின்தங்கிய கிராமப்புற மாணவருக்கு பாடசாலைக் கற்றல் உபகரணங்கள்

யாழ்ப்பாணம், பெப்.4

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டத்தில் பின்தங்கிய கிராமப்புறப் பாடசாலை மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன.

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் திருமதி சறோஜா சிவச்சந்திரன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் 300 க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் திட்ட உத்தியோகத்தர் சுவாந்தினி வேலாயுதம், யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ப.கிரிதரன், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், ஒய்வுபெற்ற மல்லாகம் மாவட்ட நீதிபதி சரோஜினி இளங்கோவன், யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், சமுக அபிவிருத்தி மன்றத்தின் தலைவி ஜெபமணி ஜோசப் ஆகியோர் கலந்து கொண்டனர். (50-224)

## சாவகச்சேரியில் சிறப்பாகச் செயற்படும் வர்த்தகர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்

யாழ்ப்பாணம்,பெப்.4

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த 25 வருடங்களாக ஒரே பெயரில் இயங்கிய வர்த்தக நிலைய உரிமையாளர்களும் மன்றத்தில் அங்கத்தவர்களாக இணைந்து 25 வருடங்கள் பூர்த்தி செய்தவர்களும் மன்றத்தினால் கௌரவிக்கப்பட்டு சிறப்புப் பரிசில்கள் பெறவுள்ளனர்.

எதிர்வரும் 14ஆம் திகதி சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறும் மன்றத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் சிறப்பு கௌரவிப்புகள் இடம்பெறவுள்ளன.

இதேவேளை சாவகச்சேரி நகர்ப் பகுதி பொதுச் சுகாதார பரிசோதகராகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லும் க.கர்ணனுக்கு பிரிவுபசாரமும் இந்நிகழ்வில் இடம்பெறும்.

அத்துடன் அமரர் ச.நமசிவாயம் நினைவு புலமைப் பரிசில் நிதி, அமரர் கு.தவராசசிங்கம் நினைவு விதவை நிதி போன்றவையும் இந்நிகழ்வில் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (202-207)

## மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் பணியாற்ற விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்,பெப்.4

தேச நிர்மாணம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் கீழ் வடக்கு, கிழக்கு மாகாணம் மற்றும் இணைந்த பிரதேசங்களான அநுராதபுரம், பொலனறுவை, மொனறாகலை, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் செயற்படும் ''மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேலதிக திட்டப் பணிப்பாளர், சமூக அபிவிருத்தி நிபுணர், சிரேஷ்ட பொறியியலாளர், திட்டக் கணக்காளர், சிரேஷ்ட சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர், சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர், ஜீவனோபாய அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், நிதி மற்றும் வழி நடத்தல், மதிப்பீடு செய்தல் உத்தியோகத்தர், சேகரிப்பு உத்தியோகத்தர், சுற்றாடல் உத்தியோகத்தர், பால் நிலை உத்தியோகத்தர், சமூக வலுவூட்டாளர், பொறியியல் உதவியாளர், படவரைஞர், முகாமைத்துவ உதவியாளர், சமூக வலுவூட்டாளர் - பாரிய நீர்ப்பாசனத் திட்டம், சிரேஷ்ட தரக்கட்டுப்பாட்டு பொறியியலாளர், தொழில்நுட்பவியலாளர் ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பங் கோரப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் ஜீவனோபாய அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூக வலுவூட்டளர் பதவிகளுக்கும் வெற்றிடங்கள் உள்ளன.

விண்ணப்பதாரிகள் www.re.awakening.org எனும் இணையத்தளத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள லாம்.

மேற்குறிப்பிட்ட முறையில் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்கள் மாவட்டச் செயலகத்தில் உள்ள மீள் எழுச்சித்திட்ட அலுவலகத்தில் உரிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக திட்டப் பணிப்பாளர், மீள் எழுச்சித்திட்டம், வரோதயநகர், திருகோணமலை எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவிகளுக்கு தனித்தனி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(203-249)

## நடைபாதைக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் பயணிக்குமாறு யாழ்.நகரில் மக்களிடம் கோரிக்கை

வண்ணை,பெப்.4

யாழ்.நகரப் பகுதியில் பாதசாரிகள் நடைபாதைக்கு ஒதுக்கப்பட்ட பகுதியால் பயணிக்கும்படி கேட்கப்படுகின்றனர்.

யாழ்.பஸ் நிலையப் பகுதியை அடுத்துள்ள மின்சார நிலையம், யாழ்.போதனா வைத்தியசாலை ஆகிய இடங்களில் நடைபாதையில் பாதசாரிகளுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களாலேயே மக்களை சென்றுவரும்படி பொதுநலத் தொண்டர்கள் மற்றும் போக்குவரத்துப் பொலிஸார் மக்களிடம் கூறி வருகின்றனர்.

தற்சமயம் நடைபாதை கடைகள் அகற்றப்பட்டு மேற்படி வீதிப் பகுதிகள் வெறிச்சோடி வாகனப் போக்குவரத்துக்கு இடையூறுகள் இல்லாமல் காணப்படுகிறது.

இதனால், நகரில் குறிப்பாக ஆஸ்பத்திரி வீதியில் போதனா வைத்தியசாலை, மின்சார நிலையம் மற்றும் பஸ்நிலையப் பகுதிகளில் நெரிசல் தவிர்க்கப்பட்டுள்ளதைக் காண முடிகிறது. (203-160)

## முறைசாராக் கல்விப் பிரிவினரால் வடமராட்சி வலயத்தில் 16 பயிற்சிநெறிகள்

வடமராட்சி,பெப்.4

முறைசாராக் கல்விப் பிரிவின்கீழ் வடமராட்சி கல்வி வலயத்தில் இம்முறை 16 பயிற்சி நெறிகள் கற்பிக்கப்படவுள்ளன.

கணனி, மின்சார இலத்திரனியல், கணனி திருத்தம், தொலைக்காட்சிப் பெட்டி திருத்தம், படகு இயந்திரம் திருத்தம், வீட்டு மின் இணைப்பு, உடையமைத்தல், துணி அச்சிடல், தலையலங்காரக்கலை, மனைமுகாமைத்துவம், பன்பொருள் கைப்பணி, அலுமினியம் பொருத்துதல், மரத்தளபாட வடிவமைப்பு, மோட்டார் சைக்கிள் திருத்தம், துவிச்சக்கர வண்டி திருத்தம், மோட்டார் லொறி திருத்தம் ஆகிய பயிற்சி நெறிகளே ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறிகளை மேற்கொள்ள விரும்பும் விருப்புக் குழுக்களிடமிருந்து பாடசாலைகள் மூலமாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள இப்பயிற்சிநெறிகள், கிடைக்கப்பெறும் பயிற்சியாளர்களின் தொகை, நிலையத்தின் கருவி, உபகரணவசதி, தகைமையுள்ள போதனாசிரியர் வசதி என்பனவற்றைக் கருத்தில் கொண்டு பயிற்சி நிலையங்கள் தீர்மானிக்கப்படும் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா அறிவித்துள்ளார்.

இதேவேளை இப்பயிற்சி நெறிகளைப் போதிக்க பொருத்தமான போதனாசிரியராகக் கடமையாற்றுவதற்கு தகைமையானவர்களிடமிருந்து விண்ணப்பங்களை வடமராட்சி கல்வி வலயம் ஏற்கனவே கோரியிருந்ததது. (203-236)

## புலோலி ப.நோ.கூ.சங்கத்தால் முதலீட்டுப் பரிசுத் திட்டம்

வடமராட்சி,பெப்.4

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கி கூட்டுறவை வளர்த்திடுவோம் என்னும் முதலீட்டு பரிசுத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

500 ரூபா பெறுமதியான இம்முதலீட்டுப் பரிசுத் திட்டத்தில் ஒருவர் தனது பெயரில் எத்தனை பத்திரங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

இத்திட்டத்தில் இணைந்து கொள்வதன் மூலம் முதலாம் பரிசாக 25 ஆயிரம் ரூபாவையும், இரண்டாம் பரிசாக 12 ஆயிரத்து 500 ரூபாவையும், மூன்றாம் பரிசாக 7 ஆயிரத்து 500 ரூபாவையும், 500 ரூபா கொண்ட தலா 10 ஆறுதல் பரிசுகளையும் பெற்றுக் கொள்ள முடியும். (203-236)

## விளையாட்டுப் போட்டிகள் களியாட்ட நிகழ்வுகள் அல்ல மாணவர்களின் வளர்ச்சிக்கான ஒரு படிநிலையே

### வலி.கிழக்குப் பிரதேச செயலர் சொல்கிறார்

சித்தங்கேணி,பெப்.4



தற்போது பாடசாலைகளில் நடத்தப்பட்டுவரும் விளையாட்டுப் போட்டிகள் பொழுது போக்கிற்கான களியாட்ட நிகழ்வுகள் அல்ல. அது மாணவர்களது வளர்ச்சிக்கான ஒரு படிநிலை நிகழ்வேயாகும்.

இவ்வாறு தெரிவித்தார் வலி.கிழக்குப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ்.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மற்றும் இளவாலை கன்னியர் மட மகாவித்தியாலயம் ஆகியவற்றின் மெய்வன்மைப் போட்டி[illegible] இடம் பெற்றன. இந்[illegible]ராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதேச செயலர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

நான் இக்கல்லூரியின் பழைய மாணவன் இக்கட்டான சூழலிலும் போர் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு எமது பிரதேசம் பின்தங்கிய நிலையிலும் கூட மாணவர் வளர்ச்சி கருதி இப்போட்டிகள் நடத்தப்படுகின்றன.

இதன்மூலம் நான் எண்பதுகளில் அன்று கண்ட அந்தப் பாடசாலையை இன்றும் ஞாபகம் ஊட்டும் வகையிலே உள்ளது. அதிலும் அணிநடைகளைப் பார்க்கும்போது பெருமிதமே தோன்றுகின்றது.

எல்லாவற்றுக்கும் மேலாக நேர முகாமைத்துவம் என்பது சிறப்பாக உள்ளது. உண்மையிலே நேர முகாமைத்துவம் என்பது ஒரு [illegible] வளர்ச்சியிலே இன்றியமை[illegible]ன்றாகும்.

இங்கு ஒரு மாணவன் ஓடத்தயாராக இருந்த வேளையில் தொடக்குநரால் விசில் ஊதிய மணிநேரம் தவறி பிந்தி தனது ஓட்டத்தை ஆரம்பித்தால் அவன் ஓடக்கூடியவனாக இருந்தும் அவனால் இரண்டாம் இடத்தையே எட்டமுடிந்தது.

எனவே விளையாட்டிலும் நேரமுகாமைத்துவம் என்பதுதான் வெற்றிதோல்வியை நிர்ணயிக்கிறது.

அதனோடு ஒழுக்கம், விடாமுயற்சி, வெற்றி, தோல்விகளை சமமாக ஏற்றுக் கொள்ளும் தன்மை போன்றவையும் பாடசாலை கல்விக் காலத்தில் இருந்தே வளர்த்தெடுக்க வேண்டும்.

அது இந்த மாணவர்களிடத்தே நன்கு வளர்க்கப்பட்டுள்ளது.

எனவே நீங்கள் விடாமுயற்சியுடன் கனவுகளுடனும் ஒரு குறிக்கோளுடனும் முயற்சித்தால் நிச்சயம் வெற்றி கிடைக்கும்.

நாளை இந்த மேடையினை என்னைப் போன்று நீங்கள் ஒவ்வொருவரும் அலங்கரிக்க வேண்டும் - என்றார். (203-112)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டுப் பாடசாலைகளின் ஆசிரிய ஆளணி மேலதிகமாக உள்ள போதிலும் கல்வி அடைவு மட்ட வெளிப்பாட்டில் முன்னேற்றம் இல்லை

## குடாநாட்டுக்கு திடீர் விஜயத்தை மேற்கொண்ட வடக்கு மாகாண கல்வி அதிகாரிகள் கவலை

சமகால நெருக்கடி நிலைமைக் காரணம் காட்டிக்கொண்டு நிர்வாகச் செயற்பாடுகளை இழுத்தடிப்பதும் பொருத்தமான முறையில் நிறைவு செய்யாமல் இருப்பதும் எதிர்பார்த்த பலனை அளிக்காது. மேலும் பாதிப்பையே ஏற்படுத்தும். நீண்டகால யுத்தச் சூழ்நிலையால் கல்வித் தரத் தில் பின்தங்கிய நிலையில் உள்ள யாழ். மாவட்டத்தின் கல்வித்தரம் மீட்டெடுக்கப்பட வேண்டும். அதற்கு ஏற்ற வகையில் கல்வி நிர்வாகச் செயற்பாடுகள் உரிய நிரலின் பிரகாரம் நிறைவு செய்யப்படவேண் டும்.

என வடக்கு மாகாணக் கல்வி பண் பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்துக்கு கடந்தமாத முற்பகுதியில் வடக்கு மாகாண நிர்வாகத்துக்குப் பொறுப்பான உயர் அதிகாரிகள் குழு திருகோணமலையில் இருந்து விஜயம் செய்திருந்தது. இதில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜன், வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டு அலு வல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வி. இராசையா மற்றும் கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள், மாகாண கல்வித் திணைக்களத்தில் கடமைபுரியும் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் என பல்வேறு தரநிலை யைச் சேர்ந்த உயர் மட்டக் குழுவினர் கூட்டோடு வருகை தந்திருந்தனர்.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் ஒட்டுமொத்தமாக அதிகளவு தொகையான அதிகாரிகள் இந்தவருடம்தான் வருகை தந்திருக்கின்றனர்.

பண்டிகைக் காலத்திலும், நல்லூர் திருவிழாவுக்கும் வெளிமாவட்ட உயர் அதிகாரிகள் உத்தியோக பூர்வமாக யாழ். மாவட்டத்திற்கு விஜயம் செய்வது வழமை என பொதுமக்களினால் கூறப்பட்டாலும் இந்த முறை இவர்களின் வருகை யாழ். மாவட்டத்தில் சகலதுறைகளிலும் ஒரு வகையான விழிப்புணர்வை ஏற்படுத் தியிருப்பதாகப் பேசப்படுகின்றது.

மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் யாழ்ப்பாணத்தில் தங்கி நின்ற காலத்தில் ஒரு மணித்துளியேனும் வீணாக்கா மல் உரிய முறையில் உச்சப் பயன்பாட் டில் பிரயோகப்படுத்தி இருக்கின்றார்.

நெடுந்தீவு உள்ளடங்கலாக நேரடியாக விஜயம் செய்திருப்பதோடு சகல தர நிலையில் உள்ள பாடசாலைகளையும் உள்ளடக்கி ஐந்து கல்வி வலயங்களுக்கும் திடீர் விஜயம் செய்திருப்பதோடு, யாழ்.மாவட்ட மட்ட, வலய மட்ட கல்வி நிர்வாகிகளின் அனைத்துச் செயற்பாடுகளையும் மதிப்பீடு செய்துள்ளார். உட னுக்குடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு இடித்துரைத்திருப்பதோடு, கடிந்தும் உள் ளார் எனக் கூறப்படுகின்றது. மொத் தத்தில் யாழ்.மாவட்டத்தின் கல்வி வல யங்கள் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும் என அவரால் பணிக்கப்பட்டவையாவன:

ஆசிரியர் இடமாற்றம், பாடசாலை மேற்பார்வை, தகவல் தொகுப்பு, மாகாணத்துக்கும் வலயத்திற்கும் இடையில் உள்ள தொடர்பு, வலயங்கள் ஊடாக சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகள் திருத்தமாகவும் விரைவாகவும் சமர்ப்பிக்க வேண்டியதன் அவசியம், கல்வி அமுலாக்கல், பாடசாலைகள் அலுவலகங்களின் வருடாந்தக் கணக்கெடுப்பு, பாடசாலைகளின் நிதியைக் கையாளுகை, கணக்காய்வு, பாடசாலை மாணவர் அனுமதிக்கு நன்கொடைகள், அன்பளிப்புகள் பெறுதல், வருடாந்த கல்வி அமுலாக்கல் உள்ளிட்ட தலைப்புக்களில் விசேட கவனம் செலுத்தி இருப்பதோடு, குறித்தவிடயங்கள் தொடர்பாக செயற்பாட்டு அறிக்கைகளை மாகா ணத்துக்குச் சமர்ப்பிக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

### ஆசிரியர் தேசிய இடமாற்றக் கொள்கை அமுலாக்கல் இல்லை- அதிகாரிகள் விசனம்

ஆசிரியர் தேசிய இடமாற்றக் கொள்கை தொடர்பாக உரியமுறையில் உரிய காலப் பகுதியில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. 2008ஆம் ஆண்டு இறுதிக்குள் நிறைவு செய்திருக்க வேண்டிய செயற்பாடுகள் 2009ஆம் ஆண்டு ஜனவரியிலும் உரிய முறையில் மேற்கொள்ளப் படாமல் இருப்பது கல்வி அமைச்சின் செயலாளரையும் மாகாணக் கல்விப் பணிப்பாளரையும் அதிர்ச்சிக் குள்ளாக்கியுள்ளது.

இது தொடர்பாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா கருத்துத் தெரிவிக் கையில்-

ஆசிரிய தேசிய இடமாற்றக் கொள் கை தொடர்பாக மத் திய கல்வி அமைச்சு விரி வான செயற்றிட்டம் ஒன்றை முன்வைத் துள்ளது. அதில்

ஆசிரியர் இடமாற்றச் சபைகளின் செயற்பாடு, ஆசிரியர்களின் இடமாற்றத் துக்கான செயற்பாடுகள் மே மாதத்தில் ஆரம்பித்து நவம்பர் முதலாம் திகதிக்கு முன்னர் முடிவடைய வேண்டும்.

★ஆசிரியர் இடமாற்றம் தொடர் பான தகவல்களைத் திரட்டல்- மே மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர்.

★ இடமாற்ற விண்ணப்பம் கோரல் யூன் 1- 30 வரை

★ இடமாற்றச் சபையின் கூட்டம் யூலை 01- யூலை 31

★இடமாற்றக் கடிதங்களை வழங் கல் செப்ரெம்பர் 15ஆம் திகதியில் இருந்து செப்ரெம்பர் 30 திகதி வரை.

★மேன்முறையீடுகளைப் பெறல் ஒக்ரோபர் 01- 15 வரை.

★ மேன் முறையீட்டை பரிசீலனை செய்து முடிவுகளை அறிவித்தல்- நவம்பர் முதலாம் திகதிக்கு முன்னர் என அறிவிக் கப்பட்டிருக்கிறது.

இந்தச் செயற்பாடுகளை வலியுறுத்தி மே மாதம் மாகாணக் கல்வித் திணைக்களம் அறிவித்திருந்தது. ஆனால் ஆசிரியர் இட மாற்றம் தொடர்பான செயற்பாடுகள் பொருத்தமான முறையில் முன் னெடுக்கப்படவில்லை என்பதை சுட்டிக் காட்டி மாகாணக்கல்விப் பணிப்பாளர் கவலை தெரிவித்துள்ளார். உடன் நடவடிக்கைக்கு பணிப்புரை விடுத் துள்ளார்.

கல்வி அமைச்சின் செயலாளர் தனது சூறாவளிச் சுற்றுப் பயணத்தில் தீவகம் உட்பட்ட சகல பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளின் செயற்பாடுகளையும் அவதானித்துள்ளார். பாடசாலைகளின் கற்றல், கற்பித்தல் வளர்ச்சி நிலை தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் நெடுந்தீவில் உள்ள பாடசாலைகளில், பாடசா லைகளின் பெயர் குறிப்பிட்டு பாராட்டுத் தெரிவித்த அதே வேளையில் நகரப் புறங்களில் உள்ள பிரபல பாடசாலைகளின் நிலை "பெருங் காய டப்பா" என குறியீட்டின் மூலம் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் ஆசிரியர்கள் ஆளணி மேலதிகமாக உள்ள போதிலும் அதற்கேற்ப வகையில் கல்வி அடைவுமட்ட வெளிப்பாடு துலங்கவில்லை எனக் கவலை தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளில் நன்கொடைகள், அன்பளிப்புகள் தொடர்பாக கணிசமான அளவு புகார்கள், முறையீடுகள் கிடைத் துள்ளன. இந்த விடயத்தில் பாடசாலை முகாமைத்துவம் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக நடத்த முன்வரவேண்டும் என்பதை வலியுறுத்திய அதேவேளையில் பாடசாலைகளின் நிதி கையாளுகை, பொருள்பதிவேடுகள், கணக்கெடுப்புகள், கணக்கு பரிசோதனைகள் தொடர்பாக திருப்தியான நிலை இல்லை என்பதை செயலாளர் வெளிப்படுத்தத் தவறவில்லை.

பாடசாலை மாணவர்களின் பாடத் துறை ரீதியான பயிற்சிப் புத்தகங்கள் உட்பட சகலவற்றையும் உரியமுறையில் அவதானித்து வீடியோ பதிவு செய்யப் பட்டு அவதானிப்புக்கள் தொடர்பான காட்சிப் படுத்தல்கள், கலந்துரையாடல் கள் மாகாணக் கல்வி அமைச்சு மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறைபாடுகளை குறுகிய காலத்தில் நிவர்த்தி செய்வதற்கான வழிவகைகள் தொடர்பாக திருகோணமலையில் உயர் மட்டக் கருத்துப் பரிமாறல்கள் மேற் கொள்ளப்பட்டிருப்பதோடு, துறைசார் ரீதி யாக பொறுப்பானவர்களிடமும் விளக் கங்கள் கோரப்பட்டிருப்பதாக அறியப் படுகின்றது.

திருகோணமலை உயர் அதிகாரி களின் திடீர் விஜயம் எதிர்பார்த்தளவுக்கு அவர்களுக்கு திருப்தியாக இல்லை என்பது ஒட்டுமொத்த வெளிப்பாடாக இருப்ப தால், உயர் அதிகாரிகள் குழுவாகவும் தனித் தனியாகவும் யாழ். மாவட்டத்துக்கு மீண் டும் வரத் தீர்மானித்திருப்பதாக அறியப் படுகின்றது.

**ஞான ஆதவன்**


## ஏகாம்பரம் புடைவை மாளிகை

★ சூட்டிங் வகைகள் ★சாறி வகைகள்
★ கொட்டன் பற்றிக் வகைகள்

மற்றும் புடைவைத் தினுசுகள்
அனைத்தையும் மொத்தமாகவும் சில்லறையாகவும்,
மலிவாகவும் பெற்றுக்கொள்ள

**ஏகாம்பரம் புடைவை மாளிகை**

இல.72, பெரியகடை, யாழ்ப்பாணம்.
(கூட்டுறவுச் சங்கங்களுக்கு விஷேட கழிவுண்டு)
(சி/556766)


## வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 21 • 08 • 1989



மறைவு 21 • 01 • 2009

**செல்வன் கோணேசன் சுஜீவன்**

கடந்த 21.01.2009 அன்று இறைவனடி சேர்ந்த எமது மகன் அமரர் கோணேசன் சுஜீவன் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (05.02.2009) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வழக்கம்பரை,
தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.

அன்னாரின் குடும்பத்தினர்
கோணசன் சுசிலாதேவி,
நாதஸ்வர வித்துவான் ஆர்.சிவகுமார் (மாமா).

(82438)

# இலங்கை குடியரசின் 61 ஆவது சுதந்திரதினம்; நாடு முழுவதிலும் இன்று கொண்டாடப்படுகிறது

இன்று இலங்கை ஜனநாயக சோசலி சக் குடியரசின் அறுபத்தோராவது சுதந்திரதினம் இலங்கை முழுவதும் கோலாகல மாகக் கொண்டாடப்படுகிறது. இலங்கையின் வடகிழக்கு மகாணங்களின் பெரும் பகுதியைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த புலிகள் இயக்கத்தை ஒரு குறுகிய வட்டத்துக்குள் ஒடுக்கியமைக்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சிங்கள மக்களாலும் மகாசங்கத்தினராலும் வரலாற்று நாயகனாகச் சித்தரிக்கப்பட்டுள்ளார். சிங்கள மன்னர்களின் காலம் இலங்கையில் மீண்டும் பிறந்துள்ளதாகவும், துட்டகைமுனுவின் காலம் தோன்றியுள்ளதாகவும் கூட தெற்கில் பிரசாரம் மேற்கொள்ளப்படுகின்றது. முல்லைத்தீவைக் கைப்பற்றியமைக் காக மகாசங்கத்தினர் ஜனாதிபதியைக் கௌரவித்துள்ளனர். எண்பத்தைந்து வீதத்திற்கு மேற்பட்ட சிங்கள மக்களும் அறு பது வீதத்திற்கு மேற்பட்ட முஸ்லிம் மக்களும் யுத்தத்தை ஆதரிப்பதாக அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொண்ட கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின்றன.

தொண்ணூறுவீத இலங்கையர்களின் ஆதரவுடன் மகிந்தராஜபக்ஷ ஆயுள்கால ஜனாதிபதியாக வேண்டுமானாலும் பதவி வகிக்கலாம். ஜே.ஆர். சர்வசன வாக்கெடுப்பின் மூலம் ஐ.தே.க அரசாங்கத்தின் பதவிக் காலத்தை நீடித்தது போன்று மகிந்த ராஜபக்ஷவும் தம்மை ஆயுட்கால ஜனாதிபதியாக நீங்கள் விரும்பினால் தெரிவு செய்யலாம் என அறிவித்தால் தொண்ணூறு வீத அதிகப்படியான வாக்குகளுடன் ஜனாதிபதி வெற்றிவாகை சூடுவார்.

சிங்கள மக்களுடன் சேர்ந்து தமிழர்க ளும் கட்டாயமாகச் சுதந்திரதினம் கொண்டாட வேண்டும். சுதந்திரதினம் கொண்டாடாதவர்கள் துரோகிகளாகவோ தேசப் பற்று இல்லாதவர்களாகவோ கருதப்படுவர். இலங்கைப்பிரஜைகள் அனைவரும் கண்டிப்பாக சுதந்திரதினத்தைக் கொண்டாட வேண்டும். முல்லைத்தீவு அரச படைகளிடம் வீழ்ச்சியடைந்ததும் பி.பி.சி தொலைக் காட்சிக்குப் பேட்டியளித்த பாதுகாப்புத் துறைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல "இனி எந்தவொரு தமிழ்க்குழுவுடனும் எந்த வித பேச்சுவார்த்தையும் இல்லை" எனக் கூறிவிட்டார். "மனிதாபிமான இராணுவ நடவடிக்கை மூலம் கிளிநொச்சி, முல்லைத்தீவு யாவும் விடுவிக்கப்பட்டுவிட்டன. கிழக்கில் மனி தாபிமான இராணுவ நடவடிக்கை மூலம் புலிப்பயங்கரவாதிகளிடமிருந்து மீட்கப் பட்ட பிரதேசங்களில் மக்கள் இன்னும் மீளக்குடியமர்த்தப்படவில்லை. இவர்கள் அனைவரும் விரைவில் மீளக்குடியமர்த் தப்பட வேண்டும்" என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந் தன் கூறியுள்ளார்.

மூதூரில் தமிழர்களின் பாரம்பரியப் பிர தேசமான சம்பூர் உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. வலி வடக்கிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் இன்னமும் முகாம்களிலேயே வசித்து வருகின்றனர். ஏ32, ஏ9 ஆகிய இரு பாதைகளும் இலங்கை இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிட்டன. இதேவேளை புங்குடுதீவிலிருந்து மன்னாருக்கு படகுப் போக்குவரத்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது. சில வேளை கிளிநொச்சியும் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்படலாம்.

யாழ்ப்பாண நகரப்பகுதிக்குப் பொது மக்கள் வருவதற்கு ஒரேயொரு பாதைதான் உள்ளது. வீதியில் யாராவது தெரிந்த வர்களைக் கண்டாலும் கதைக்க முடியாது. வீதியில் யாராவது தெரிந்தவர்களுடன் உரையாட முற்பட்டால் உடனே வீதியில் நிற்கும் சிப்பாய் வந்து, வீட்டில் போய் இருந்து கதையுங்கள்(கெதரட்ட கீலா கத்தா கறணவா) என உத்தரவிடுகிறார். மாகாணசபை உயரதிகாரிகள் சிலர் வடமராட்சிக்குச் செல்ல முற்பட்டு வீதித்தடை காரணமாக போக முடியாமல் திரும்பியுள்ளனர். என்னடா, எமக்குத் தெரியாத விடயத்தையா இவன் எழுதுகிறான் என்று யோசிக்கிறீர்களா.

இன்று சுதந்திரதினம். இலங்கை மக்களனைவரும் இலங்கையின் சுதந்திர தினத்தைக் கண்டிப்பாகக் கொண்டாட வேண்டும். நீங்கள் முகாமில் இருந்தாலென்ன, கொளுத்தும் வெய்யிலில் வீதி யில் நின்றாலென்ன, அடையாளத்தை நிரூபித்துக் கொண்டிருந்தாலென்ன கண் டிப்பாகச் சுதந்திரதினம் கொண்டாட வேண்டும் என்ற சூழ்நிலை.

**நர்த்தனன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனப் பிரதமர் மீது சப்பாத்து வீச்சு கேம்பிரிஜ் பல்கலையில் சம்பவம்

லண்டன், பெப். 4

லண்டனிலுள்ள கேம்பிரிஜ் பல்கலைக் கழகத்தில், உரையாற்றிக்கொண்டிருந்த சீனப் பிரதமர் வென்ஜியா போவை நோக்கி நபரொருவர் தனது சப்பாத்துக்களிலொன்றைக் கழற்றி வீசினார். அத்துடன் அவரை ''நீங்கள் ஒரு சர்வாதிகாரி'' என கோஷமிட்டார்.

இவ்வாறு வீசப்பட்ட சப்பாத்து, சீனப் பிரதமர் வென் ஜியா போவிற்கு முன்னால் ஒரு மீற்றர் தொலைவில் விழுந்தது. பாதுகாப்பு அதிகாரிகள் பாய்ந்து அந்நபரை மடக்கிப் பிடித்து இழுத்துச் சென்றனர். இவர் ஓர் இளைஞராவார்.

''மண்டபத்தின் பின்புறத்திலிருந்து இந்த சப்பாத்து வீசப்பட்டது. சீனப் பிரதமர் நின்ற இடத்திலிருந்து சிறிது தொலைவிலேயே அது விழுந்தது. அவரது உரை முடியும் தறுவாயில் இச்சம்பவம் நிகழ்ந்தது. அவர் உலகப் பொருளாதாரம் குறித்து இங்கு உரையாற்றிக்கொண்டிருந்தார்'' என மண்டபத்திலிருந்த ஒருவர் தெரிவித்தார்.

''இந்த நபர் சப்பாத்தைக் கழற்றி வீசுவதற்கு முன்னர், சீனப் பிரதமரின் பிரசன்னத்தை ஆட்சேபிக்குமாறு சபையோரை வற்புறுத்தினார். பின்னர், ''எப்படி இப் பல்கலைக்கழகத்தால் இவரை அனுமதிக்க முடியும்?'' எனச் சத்தமிட்டு ஆர்ப்பரித்தார்'' என மற்றொருவர் அசோசியேட்ரட் பிரஸ் செய்தி நிறுவனத்திடம் விவரித்தார்.

''இந்நபர் சப்பாத்தைக் கழற்றி வீசியதும், பாதுகாப்பு அதிகாரிகள் பாய்ந்து மடக்கி இவரை வெளியே இழுத்துச் சென்றார்கள். அப்போது சபையிலிருந்த அநேகர் இந்த இளைஞரைத் திட்டித் தீர்த்தார்கள். இது ஒரு வெட்கக்கேடான செயல் என்றும் சாடினார்கள்'' என ஏ.எவ்.பி. செய்தி நிறுவனம் குறிப்பிட்டது.

''சீனப் பிரதமர் சொற்பொழிவு நிகழ்த்துவதற்கு பல்கலைக்கழகத்துக்கு வந்துகொண்டிருந்த சமயம், சீன ஆதரவாளர்கள் சீனாவிலும், திபெத்திலும் தலையெடுத்துள்ள மனித உரிமை சீர்கேடுகளுக்குக் கண்டனம் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் ஆகிய அனைவரையும் முகமலர்ந்து சந்திக்கத் தவறவில்லை. அப்போது எவ்வித அசம்பாவிதமும் நேரவில்லை'' என பாதுகாப்பு அதிகாரியொருவர் தெரிவித்தார்.

''டிசெம்பர் மாதம் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு. புஷ் ஈராக்கிய விஜயத்தை மேற்கொண்ட போது, அவரை நோக்கி பத்திரிகையாளரொருவர் தம் சப்பாத்துகளைக் கழற்றி ஒன்றன் பின் ஒன்றாக வீசினார். இச்சம்பவமும் அதனை ஒத்ததாக உள்ளது'' என மாணவர் ஒருவர் குறிப்பிட்டார்.

## சோமாலியாவில் 18 பேர் பலி

மொகடிஷ்ஷு, பெப். 4

''சோமாலியாவின் தலைநகரான மொகடிஷ்ஷுவில், ஆபிரிக்க ஒன்றிய அமைதிப் படைகள், சிவிலியன்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளன. இதில் 18 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 26 பேர் காயமடைந்துள்ளனர்'' என பிராந்திய அதிகாரிகள் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்கள்.

''ஆபிரிக்க ஒன்றிய அமைதிப்படையின் வாகன அணியைச் சேர்ந்த வாகனமொன்று, மொகடிஷ்ஷுவில் வீதியோரக் குண்டு வெடிப்பில் சிக்கியது. இதில் நான்கு வீரர்கள் படுகாயமடைந்தார்கள். பாதசாரிகளான மூன்று சிவி ன்களும் கொல்லப்பட்டார்கள். இதையடுத்தே, படைகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தன'' என நேரில் கண்ட நகரவாசிகள் குறிப்பிட்டார்கள்.

## இந்தோனேஷிய கட ில் தத்தளித்த படகு ப்பு

ஜகார்த்தா, பெப்.4

''இந்தோனேஷியாவின் மாகாண கரைப் பிராந்தியத்துக்கு அப்பால் மரப் படகொன்றில் தத்தளித்துக்கொண்டிருந்த ஏறத்தாழ 200 பேர் மீட்கப்பட்டனர். இவர்கள் சட்ட விரோதக் குடியேற்றக்காரர்களாவர்'' என இந்தோனேஷிய அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

''இந்த மரப்படகு கடல் புயலில் சிக்கி விபத்துக்குள்ளாகியுள்ளது. இதில் பயணித்தவர்கள் 21 நாள்களாக கடலில் விபத்துக்குள்ளான படகில் தத்தளித்து வந்துள்ளனர். மீனவர்களால் திங்கட்கிழமை இவர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்கள்'' என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

''மீனவர்களின் தகவலை அடுத்து இந்தோனேஷிய கடற்படையினரால் அனைவரும் மீட்கப்பட்டனர். இவர்கள் தங்களால் கொண்டுவரப்பட்ட உணவுகளும், குடிதண்ணீரும் தீர்ந்துவிட்டமையால், பசியாலும் மயக்கத்தாலும் உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் பாதிக்கப்பட்டு வந்துள்ளனர். மீட்கப்பட்டவர்களில் அறுபதுக்கு மேற்பட்டோர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்'' என ஓர் அதிகாரி தெரிவித்தார்.

## கா ாவிலிருந்து ஏவப்பட்ட றொக்கெட் இஸ்ரேலிய நகரில் வீழ்ந்து வெடிப்பு

டெலி அவிவ், பெப்.4

''காஸாவிலிருந்து பலஸ்தீன தீவிரவாதிகளால் ஏவப்பட்ட நீண்ட தூர றொக்கெட் ஒன்று, இஸ்ரேலிய நகரான அஸ்கெலன் நகரப்புறத்தில் வந்து விழுந்தது. எனினும், எவரும் இத்தாக்குதலில் பாதிப்படையவில்லை'' என இஸ்ரேலிய பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.



''இஸ்ரேலும், ஹமாஸ் அமைப்பும் ஜனவரி 18 ஆம் திகதி ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தப் பிரகடனங்களை செய்தன. இப்பிரகடனங்களுக்குப் பின்னர் காஸாவிலிருந்து மேற்கொள்ளப்பட்ட நீண்ட தொலை றொக்கெட் தாக்குதல் இதுவாகும்'' என்றும் அது சுட்டிக்காட்டியது.

''அஸ்கெலன் நகரம், வட காஸாவிலிருந்து 12 கிலோ மீற்றர் (7 மைல்) தொலைவில் உள்ளது. இந்நகர் 1,22,000 குடியிருப்பாளர்களைக் கொண்டது. இதுவரை காஸாவிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வந்த குறுகிய தொலை றொக்கெட் தாக்குதல்களாலும், மோர்ட்டார் தாக்குதல்களாலும் இந்நகர் பாதிப்புக்குள்ளாகவில்லை. இப்போதுதான் முதன்முதலாக நீண்ட தொலை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது'' என்றும் அது குறிப்பிட்டது.

''றொக்கெட் தாக்குதல்கள் நீடிக்குமானால், இஸ்ரேல் உக்கிரமான பதிலடிகளை மேற்கொள்ளும். இஸ்ரேலிய மக்களினதும், நகரங்களினதும் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்திக் கொள்ள முழு வீச்சில் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கும்'' என இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

உலக அரங்கில்

## லண்டனில் கடும் பனி; இயல்பு நிலை பாதிப்பு




லண்டன், பெப்.4

லண்டனில் நீடித்துவரும் பனிப் பொழிவால் இயல்பு நிலை பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. நகரில் கடும் பனிப் பொழிவால் திங்கட்கிழமை அனைத்து பஸ் போக்குவரத்துகளும் நிறுத்தப்பட்டன. எனினும், சுரங்க ரயில் பாதை ரயில் சேவைகள் முழுமையாக இயங்கின.

இங்கிலாந்தின் தென் கிழக்குப் பகுதியிலிருந்து ஆரம்பமாகும் விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டன. சேவைகள் இரத்துச் செய்யப்படுவதற்கு முன்னர் புறப்பட்ட பல விமானங்களும் காலதாமதத்துக்குப் பின்னரே இலக்குகளை அடைந்தன.

''நகரில் பனிப்பொழிவு தொடர்கிறது. காலநிலை மேலும் மோசமடையக் கூடும்'' என வானிலை எச்சரிக்கை விடுத்துள்ளது.

# இலங்கைத் தமிழர்களையே நாம் ஆதரிக்கிறோம் தனிப்பட்ட பிரபாகரனுக்கு ஆதரவு எதுவும் இல்லை

## தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் கருணாநிதி அறிவிப்பு

சென்னை, பெப். 4

''இலங்கைத் தமிழர்களையே நாங்கள் ஆதரிக்கிறோம். தனிப்பட்ட பிரபாகரனுக்கு எங்கள் ஆதரவு கிடையாது.''

இவ்வாறு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் தமிழக முதல்வருமான கலைஞர் கருணாநிதி நேற்று அறிவித்தார்.

தி.மு.கவின் செயற்குழுக் கூட்டம் நேற்று சென்னையில் அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றபோது அங்கு உரையாற்றுகையிலேயே தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி இப்படி அறிவித்தார்.

அங்கு அவர் கூறியவை வருமாறு:-

இலங்கைத் தமிழர் பிரச்சினையானாலும், தமிழ் தொடர்பான எந்த பிரச்சினையானாலும் அதற்கு குரல் கொடுத்துப் போராட, வாதிட, தயாராக தி.மு.க. ஒரு சிப்பாய் போல தொடர்ந்து பணியாற்றி வருகிறது. இன்றல்ல, நேற்றல்ல, பல்லாண்டு காலமாக இதை நாடு நன்கு அறியும்.

அப்படிப்பட்ட கீர்த்தி வாய்ந்த இயக்கமான தி.மு.க. ஒரு முக்கியமான காலக் கட்டத்தில் இருக்கிறது. தி.மு.க. என்ன முடிவு எடுக்கிறது என்பதை இங்கு தீர்மானம் செய்யவுள்ளோம். நான் மருத்துவ மனையில் கடந்த 7,8 நாள்களாக இருக்கிறேன். இன்னும் ஒருவார காலம் இருக்க நேரிடும்.

இதற்கிடையே இப்போது தமிழ்நாட்டில் இலங்கை தமிழர்களுக்காக சில புதிய குரல்கள் ஒலிக்கத் தொடங்கியுள்ளன.

1956ஆம் ஆண்டு இலங்கைத் தமிழர் தந்தை செல்வநாயகம் அங்கு தமிழர்களுக்காக உரிமை போர்க்குரல் கொடுத்தார். அவரோடு அவருக்கு தளபதியாக அமிர்தலிங்கம் விளங்கினார்.

அவர்கள் இருவரும் தமிழ்நாட்டுக்கு வந்து பெரியாரையும், அண்ணாவையும், என்னையும் சந்தித்தனர். பெரியாரை சந்தித்த போது அவர் எளிமையாகச் சொன்னார். ''நீங்கள் அடிமை என்கிறீர்கள், நாங்களும் அடிமையாகத்தான் இருக்கிறோம்'' என்றார்.

### தமிழர்களை வெறுக்கும் இனம்

தமிழன் என்று சொன்னாலே பிடிக்காத வெறுக்கும் இனம் சிங்கள இனம். தமிழர்களை படுகொலை செய்து, தமிழ்ப் பெண்களை மானபங்கம் செய்து, குழந்தைகளை கொன்று குவிக்கிறார்கள்.

குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை, ஆகிய புரட்சியாளர்கள் சிறையில் இருந்த போது அவர்களுடன் இருந்த 30 பேரையும் வெலிக்கடை சிறைக்குள் கொன்று குவித்தனர். குட்டிமணியின் கண்களைத் தோண்டி எடுத்தனர். ஜெகனின் கழுத்தை வெட்டி சூலாயுதத்தில் குத்திவைத்தனர்.

1982,83இல் அமிர்தலிங்கமும் மற்ற தலைவர்களும் தமிழகம் வந்து அடைக்கலம் மற்றும் உதவிகள் கோரினார்கள். அப்போது தி.மு.க.வுடன் வேறுசில கட்சிகளுடனும் அவர்கள் தொடர்பு கொண்டு உதவி கேட்டனர். உதவினோம்.

விடுதலை இயக்கங்கள் ஒரே இயக்கமாக விளங்கவில்லை. ஒரே இயக்கமாக இருந்திருந்தால் அவர்கள் விரும்பும் தமிழீழம் கிடைத்திருக்கும். அவர்களிடம் ஒற்றுமை இல்லை.

சகோதர யுத்தம் காரணமாக ஒருவரோடு ஒருவர் மோதிக்கொண்டனர். விடுதலைப் புலிகள் தங்களைத் தாங்களே நிலை நிறுத்திக்கொண்டனர்.

### ஈழத் தமிழர்கள் உரிமை



இலங்கைத் தமிழர்களையே நாங்கள் ஆதரிக்கிறோம். தனிப்பட்ட பிரபாகரனுக்காக எங்கள் ஆதரவு இல்லை.

ஒரு பக்கம் பிரபாகரன். முகுந்தன், கருணா என்று பிரிந்து சிலர் சிங்களர் களுக்கு ஆதரவாக மாறிவிட்டனர். அமிர் தலிங் கம் கூட புலிகளால் விருந்துக்கு அழைக் கப்பட்டு அவர் மனைவி கண் எதிரில் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்தக் கொடுமைகளை எல்லாம் மறந்து ஈழ உரிமையோடு வாழவேண்டும் என்பதற் காக நாம் குரல் கொடுக்கிறோம். தி.மு.க. இதையே வலியுறுத்தி வருகிறது.

ஆனால் சில நேரங்களில் இது தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. நாங்கள் குரல் கொடுப்பது இலங்கை தமிழர்களுக்காக மட்டுமே. ஒரு தடவை ஒரு ஆங்கில பத்திரிகைக்கு பிரபாகரன் கொடுத்த பேட்டியை படித்தேன். அப்போது ஈழம் கிடைத்தால் உங்கள் ஆட்சி எப்படி இருக்கும்? என்று கேட்கப்பட்ட கேள்விக்கு சர்வாதிகாரமாக இருக்கும் என்று அவர் பதில் கூறியிருந்தார்.

அதை படித்த பிறகு அவர்களது போராட்டம் புரிந்துவிட்டது. தொடர்ந்து பலர் கொல்லப்பட்டனர். இதனால் அனுதாபம் குறைந்து, மறந்தேவிட்டது. ஆனால் இன்று தமிழர்கள், பச்சிளம் குழந்தைகள், கொல்லப்படுகிறார்கள். தாய்மார்கள் இழிவாக நடத்தப்படுகிறார்கள்.

இந்த நிலையில் தமிழ் நாட்டின் தலைவர்கள் காப்பாற்றுவார்கள் என்று இலங்கைத் தமிழர்கள் குரல் கொடுக்கிறார்கள். எனவே நாமும் ஆயுதம், இராணுவம், போர் என்பவற்றை ஆதரிக்காமல் தமிழர் களின் சக்தி ஜனநாயகம் மூலம் கூட்டப் பட வேண்டும் என்று இங்கு தீர்மானம் கொண்டு வரவுள்ளோம்.

### சிலர் 'பாவ்லா' காட்டிக்கொண்டிருக்கிறார்கள்

தமிழ்நாட்டில் சிலர் திடீரென இலங்கை தமிழர்களுக்கு ஆதரவாக போராடுகிறோம் என்று 'பாவ்லா' காட்டிக் கொண்டிருக் கிறார்கள். டாக்டர் ராமதாஸ் 'எல்லாம் முதலமைச்சர் தான் சொல்ல வேண்டும்' என்றார்.

என்னை எல்லாம் சொல்ல வைத்து, எனக்கும், மத்திய அரசுக்கும் விரோதம் ஏற்படுத்தி, இவர் தனது செல்வாக்கை நிலை நிறுத்திக்கொள்ள நினைக்கிறார். ஆட்சியை விட்டு நாம் வெளியே போகிறோம் என்று ஒரு பத்திரிகை செய்தி போடுகிறது. இந்த ஆண்டுக்குள் தி.மு.க. ஆட்சி முடிந்து தங்கள் ஆட்சி வரும் என்று ஜெயலலிதா கூறினார்.

இலங்கைப் பிரச்சினைக்காக போராடுவதாக கூறி ஆட்சியைக் கவிழ்க்கச் சதி நடக்கிறது. நாங்கள் வெளியேறி விடுவோம் என்று நினைக்கிறார்கள்.

திண்ணை ாலியானால் ஜெயலலிதா வந்து படுத்து கொள்ளலாம் என்று நினைக்கிறார். அண் னும் சாகமாட்டான், திண்ணையும் கா ஆகாது என்பதை தெரிவித்துக் கொள் றேன்.

ஈழம் ப ப்பேச, வெளிநாட்டு தமிழர்கள் பற்றி பேச, திராவிட இயக்கங்கள் தவிர வே யாருக்கும் உரிமை கிடையாது. தமிழர்களுக்காக போராடுவது போல சிலர் நாடக ஆடுகிறார்கள்.

இலங்க தமிழர்களைப் பாதுகாக்க தமிழர்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும் - இவ்வாறு கருணாநிதி பேசினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழரைப் பாதுகாக்க ஐ.நா. அமைதிகாப்புப் படையை அனுப்பவேண்டும்

## போர் நடக்கும் பகுதிகளுக்கு இந்தியப் பத்திரிகையாளர்களை அனுமதிக்குமாறும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுகள் வலியுறுத்து





மதுரை, பெப். 4

இலங்கையில் தமிழர்களைப் பாதுகாக்க ஐ.நா.சபையும், இந்தியா உட்பட சில நாடுகளும் அமைதிகாப்புப் படையை அனுப்ப வேண்டும். அங்கு போர் நடை பெறும் பகுதிகளுக்கு இந்தியப் பத்திரிகையாளர்களை அனுமதிக்க வேண்டும். தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பான வாழ்க்கையும், சுதந்திரமும் கிடைப்பதற்கு அரசியல் தீர்வை ஏற்படுத்த இந்திய அரசும், ஐ.நா. சபையும் முயற்சிக்க வேண்டும்.

- இவ்வாறு மார்க்சிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் பிரகாஷ் கரத், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் ஆகியோர் வலியுறுத்தியுள்ளனர்.

திருப்பூரில் தா.பாண்டியன் செய்தியாளர்களிடம் அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு-

இலங்கையில் போர் நிறுத்தம் இல்லை என்பதை இலங்கை அரசு உறுதிபடுத்தியுள்ளது. இலங்கையில் போர்க் களத்துக்கு இந்திய பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப்பட வேண்டும். தமிழர்களைப் பாதுகாக்க ஐ.நா. சபையும், சில நாடுகளும் அமைதி காப்பு படையை இலங்கைக்கு அனுப்ப வேண்டும்.

இன்று நடக்கும் முழு அடைப்பு போராட்டத்தைச் சட்டவிரோதம் என்று உச்ச நீதிமன்றத் தீர்ப்பைச் சுட்டிக்காட்டி அரசு கூறுகிறது.

உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு பின் மேற்கு வங்காளத்தில் 2 முறையும், கேரளாவில் ஒரு முறையும் முழுஅடைப்பு நடந்துள்ளது. இன்று நடக்கும் போராட்டத்தையொட்டி அரசு நடவடிக்கை எடுத்தால், அதைச் சந்திக்கத் தயாராக இருக்கிறோம்.

நாடாளுமன்றத் தேர்தலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு தமிழகத்தில் கோவை, தென்காசி, திருப்பூர் உட்பட 6 தொகுதிகளை அ.தி.மு.க. கூட்டணியில் கேட்டுப்பெற முடிவு செய்துள்ளோம் - என்றார்.

பிரகாஷ் கரத் நேற்றுமுன்தினம் மதுரையில் செய்தியாளர்களிடம் அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு -

இலங்கையில் முல்லைத்தீவுப் பகுதியில் இரண்டரை லட்சம் தமிழர்கள் அவதிப்பட்டு வருகின்றனர். அந்த மக்களை வெளியேற்றி பாதுகாக்க இந்திய அரசும், ஐ.நா. சபையும் முயற்சிக்க வேண்டும்.

தமிழ் மக்களுக்கு பாதுகாப்பான வாழ்க்கையும், சுதந்திரமும் கிடைக்க அரசியல் தீர்வு ஏற்படவேண்டும். இந்திய தேர்தல் ஆணையத்திலும், ஆணையர்களை நியமிப்பதிலும் சீர்திருத்தங்களை அமுல்படுத்த வேண்டுமென மார்க்சிஸ்ட் வலியுறுத்தி வருகிறது. இதில் அரசியல் தலையீடு இருக்கக் கூடாது.

ஓய்வு பெற்ற தேர்தல் ஆணையர்கள் அரசியல் கட்சியில் சேர்வதற்கும் தேர்தலில் போட்டியிடுவதற்கும் தடை விதிக்க வேண்டும் - என்றார்.

## பொது வேலைநிறுத்தத்திற்கு ஆதரவாக டாக்டர்கள் இன்று கறுப்புப்பட்டிப் போர்!

சென்னை, ஞப். 04

இலங்கை அரசையும், மத்திய அரசையும் கண்டித்து நாளை நடைபெறும் முழு அடைப்புப் போராட்டத்தின்போது கறுப்புப் பட்டி அணிந்து பணிபுரிய டாக்டர்கள் முடிவு செய்துள்ளனர்.

இதுதொடர்பாக சமூக சமத்துவத்துக்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலர் டாக்டர் ஜி.ஆர்.ரவீந்திரநாத் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

முல்லைத்தீவுப் பகுதிகளில் இலங்கைத் தமிழர்கள் மீதான இலங்கை இராணுவத்தின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. இதனால் ஏராளமான தமிழர்கள் கொல்லப்படுகின்றனர்.

மருத்துவமனைகளும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன. மருத்துவ வசதியும் மருந்துகளுமின்றி தமிழர்கள் அவதிப்படுகின்றனர்.

இந்த நிலையில் ஈழத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் நடைபெறும் முழு அடைப்பு வரவேற்கத்தக்கது. மனித உரிமைகளுக்கு எதிராகச் செயற்படும் இலங்கை அரசைக் கண்டித்தும் போரை நிறுத்த உரிய நடவடிக்கைகளை எடுக்காத மத்திய அரசைக் கண்டித்தும் டாக்டர்களின் ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

அரசு மருத்துவர்களும் தனியார் மருத்துவர்களும் இன்று கறுப்புப் பட்டியணிந்து பணிக் குச் செல்லுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள் - என்றுள்ளது.

## இலங்கைப் படுகொலையை நிறுத்தக் கோரி பராக் ஒபாமாவுக்கு சட்டத்தரணிகள் கடிதம்!

சென்னை, பெப். 4

இலங்கையில் நடைபெற்று வரும் இனப் படுகொலையைத் தடுக்க வேண்டும் எனக் கோரி அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கு, தமிழ்நாடு சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் எஸ்.பிரபாகரன் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

இலங்கையில் தற்போது 3 லட்சம் தமிழர்கள் சாவின் விளிம்பில் உள்ளனர். இலங்கை அரசின் இந்தத் தாக்குதலை உலகம் வேடிக்கை பார்க்கக் கூடாது. இனப் பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை மூலம் தீர்வு காண முடியாது என்பதை இலங்கை அரசுக்கு உணர்த்த வேண்டும் என்றும் சமதானப் பேச்சின் மூலம் தீர்வு காண வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் பிரபாகரன் கேட்டுகொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### ஈழ அகதிகள் மீது பொலிஸார் தாக்குதல்

வன்னியில் இலங்கைப் படையினர் மேற்கொண்டு வரும் தாக்குதல்களை நிறுத்துவதற்கு இந்திய மத்திய அரசு தலையிட வேண்டும் எனக் கோரி, தமிழகம் கோயம்புத்தூரில் நேற்றுமுன்தினம் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட இலங்கைத் தமிழ் அகதிகள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தமது கோரிக்கைக்கு இந்திய மத்திய அரசு செவிசாய்க்காவிட்டால், சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை மேற்கொள்ளப் போகிறோம் என அவர்கள் எச்சரித்துள்ளனர்.



இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி, கோவை பூலுவபட்டி முகாமிலுள்ள அகதிகள் நேற்றுமுன்தினம் உண்ணாவிரதம் இருந்தனர். இதில் பங்கேற்ற குழந்தைகள்.....

## பொது வேலைநிறுத்தத்தை அரசு அறிவித்தால்தான் சட்டவிரோதம்

### வைகோ தெரிவிப்பு

மதுரை, பெப்.4



ஈழத் தமிழர்கள் படும் பேரவலம் கண்டு தமது உணர்வுகளை வெளிப்படுத்த பொதுமக்கள் சுயமாக தங்கள் நடைகளையும், தொழிலாளர்கள் தங்களது பணிகளையும் நிறுத்திக்கொள்வது சட்டவிரோதம் ஆகாது. மாறாக பொது வேலை நிறுத் தத்தை அரசே அறிவித்தால்தான் சட்ட விரோதம் - என்று ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ தெரிவித்துள்ளார்.

மதுரையில் நேற்றுமுன்தினம் அவர் அளித்த பேட்டியிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு:-

புலிகள் இரு மாதங்களுக்கு முன்னரே போர் நிறுத்தம் செய்யத் தயார் என அறிவித்த பின்னரும் இலங்கை இராணுவம் தமிழர்களைக் குறிவைத்துத் தாக்கி வருகிறது.

இப்பிரச்சினையில் 7 கோடி தமிழர்களின் உணர்வுகளையும் இந்திய அரசு மதிக்கத் தவறிவிட்டது. இதைத் தட்டிக் கேட்க வேண்டிய முதல்வர் கருணாநிதி, தமிழர்களுக்குப் பச்சைத் துரோகம் செய்து விட்டார்.

தமிழர்களைக் காக்கக் கோரியும், இந்திய அரசுக்குக் கண்டனம் தெரிவித்தும் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் அறிவித்துள்ள பொது வேலைநிறுத்தம் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை மீறும் செயல் என்றும், சட்டவிரோதம் எனவும் தெரிவித்திருப்பது ஏற்கத் தக்கதல்ல - என்றார்.

## பொது வேலைநிறுத்தத்தில் பங்கேற்குமாறு சகல கட்சிகளுக்கும் திருமா. அழைப்பு

சென்னை, பெப்.4

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக இன்று நடக்கும் பொது வேலைநிறுத்தப் போராட்டத்தில் பங்கேற்குமாறு தி.மு.க., அ.தி.மு.க., காங்கிரஸ் ஆகிய கட்சிக ளுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

தமிழகத்தில் பல்வேறு இடங்களில் கல்லூரி மாணவர்கள்சாகும்வரை உண்ணா விரதப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் 'இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம்' இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி இன்று தமிழகம் முழுவதும் பொது வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி இன்று நடத்துவதாக அறிவித்திருந்த இலங்கை தேசியக் கொடி எரிப்புப் போராட்டம் ரத் துச் செய்யப்படுகிறது - என்றும் தெரிவித்துள்ளார்.

## தமிழக மீனவரை நடுக்கடலில் தாக்கி வலைகளுக்கு இலங்கைக் கடற்படை தீவைப்பு

இராமேஸ்வரம், பெப்.4

நடுக்கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கயிற்றால் தாக்கி, கடலில் தள்ளிவிட்டு சித்திரவதை செய்து, அவர்களின் மீன்பிடி வலைகளை வெட்டி கடலில் வீசியும், டீசல் ஊற்றி தீ வைத்துக் கொளுத்தியும் விரட்டியடித்தனர் - என்று நேற்றுமுன்தினம் கரை திரும்பிய மீனவர்கள் தெரிவித்தனர் என தமிழக நாளேடான 'தினமலர்' செய்தி வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து மேலும் அதில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

இராமேஸ்வரம் சங்குமால் கடற்கரையிலிருந்து கடந்த [illegible] 26 [illegible] களில் மீனவர் [illegible] நள்ளிரவில் கச்சத்தீவுக் கடல் பகுதிக்கருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அங்கு வந்த இலங்கைப் கடற்படையினர் படகிலிருந்த மீனவர்களை கயிற்றால் தாக்கி, துப்பாக்கியால் மிரட்டி கடலில் குதிக்க வைத்தனர். படகில் இருந்த மீன்பிடி வலைகளை வெட்டி கடலில் வீசி விரட்டியடித்தனர்.

பாம்பன் லைட்ஹவுஸ் பகுதியைச் சேர்ந்த சகாயம், அக்காள் மடம் ஜோசப், பார்த்தீபன் ஆகியோரின் படகு உட்பட 10 க்கும் மேற்பட்ட படகிலிருந்த மீனவர்களை தாக்கிய இலங்கை கடற்படையினர், எல்லை தாண்டி வரக்கூடாது எனவும் எச்சரித்து அனுப்பினர்.

அக்காள் மடத்தைச் சேர்ந்த மீனவர் [illegible] கூறுகையில் -

[illegible] ஒரு மணிக்கு படகில் வந்த இலங்கைக் கடற்படையினர் எங்கள் படகில் இருந்த வலைகள் மீது டீசல் ஊற்றி தீ வைத்ததால் படகிலும் தீப்பிடித்தது. கடற்படையினர் சென்றதும் கடல் நீரால் தீயை அணைத்து கரை திரும்பினோம் - என்றார்.

மீனவர்கள் செபஸ்தியன், அருள்,தெற்கு வாடி பெருமாள் கூறுகையில் -

நடுக்கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் படகில் ஏறி கயிற்றினால் எங்களை தூக்கினர். வலைகளை வெட்டி கடலில் வீசியபின் மிரட்டி கடலில் குதிக்க வைத்தார்கள். நீண்ட நேரம் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த நாங்கள் கடற்படையினர் சென்றவுடன் படகில் ஏறி தப்பித்து வந்தோம் - என்றனர்.

இது குறித்து மீன்துறை மற்றும் புலனாய்வுத் துறையினர் விசாரித்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் கிடைப்பதற்கான தடைகளை உடனடியாக நீக்குக!

## அரசிடமும் புலிகளிடமும் அமெ. செனட்டர்கள் வேண்டுகோள்

கொழும்பு, பெப். 04

நாட்டில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான மோதல்களில் சிக்கியுள்ள பொதுமக்களைப் பாதுகாக்குமாறும் மனிதாபிமான உதவிகளுக்கான தடைகளை நீக்குமாறும் இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் அமெரிக்காவின் இரு முக்கிய செனட்டர்கள் கேட்டுள்ளனர்.

அமெரிக்க செனட்டின் வெளிவிவகார உறவுகளுக்கான குழுவின் தலைவரான ஜனநாயகக் கட்சியின் ஜோன் கெரியும் குடியரசுக் கட்சியின் மூத்த செனட்டர் ரிச்சட் லூகரும் கூட்டாக இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

ஜனாதிபதி பராக் ஒபாமாவின் நெருங்கிய சகாக்களான இவர்கள் இலங்கையில் மனிதாபிமான நிலை மோசமடைவது குறித்து ஆழ்ந்த கவலையடைந்துள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் பொதுமக்களைப் பாதுகாப்பதற்கும் மனிதாபிமான உதவிகள் அவர்களைச் சென்றடைவதற்கும் அவசியமான நடவடிக்கைகளை எடுக்கும்படி அவர்கள் கோரியுள்ளனர்.

இலங்கை அரசு, சர்வதேச இராஜதந்திரிகள், வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் மற்றும் மனிதாபிமான அமைப்புக்களை வெளியேற்றப் போகின்றது என சமீபத்தில் விடுத்துள்ள எச்சரிக்கை குறித்து தாங்கள் ஆழ்ந்த குழப்பம் அடைந்துள்ளனர் என அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கையில் செய்தியாளர்கள் ஏற்கனவே மோசமான தாக்குதலுக்கும் அச்சுறுத்தலுக்கும் உள்ளாகியுள்ளனர். பிரபல பத்திரிகையாளர் லஸந்த விக்கிரமதுங்கவும் மிகவும் துணிச்சலான விதத்தில் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என இருவரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நாட்டில் உள்ள சகல பொதுமக்களையும் பாதுகாக்குமாறும், பத்திரிகையாளர்கள் மற்றும் பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் குறித்து அரசு முழுமையான நம்பகத் தன்மை மிக்க விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் இரு செனட்டர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-சி)

## இலங்கையில் சிவிலியன் பாதுகாப்பு; தென்னாபிரிக்கா மீண்டும் கவலை தெரிவிப்பு

கொழும்பு, பெப். 04

இலங்கையில் சிவிலியன்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டுமென தென் ஆபிரிக்கா மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளது. சர்வதேச மனிதாபிமான நியமங் களுக்கு அமைவாக யுத்தத்தில் ஈடுபட்டு வரும் அரசும், விடுதலைப் புலிகளும் செயற்பட வேண்டுமென தென்னாபிரிக்கா சுட்டிக்காட்டியுள்ளது.

யுத்த பிரதேசத்தில் சிக்கியுள்ள இரண்டரை லட்சம் சிவிலியன்கள் மற்றும் தொண்டு நிறுவனப் பணியாளர்கள் தொடர்பில் தமது அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக தென்னாபிரிக்க வெளிவிவகார அமைச்சு அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் சமாதானத்தை நிலை நாட்ட தென்னாபிரிக்க அரசு தொடர்ச்சியாக ஒத்துழைப்பு வழங்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. நிரந்தர சமாதானத்தை நிலைநாட்ட வேண்டுமாயின் அனைத்து தரப்பினரும் பேச்சுகளின் மூலம் இணக்கப்பாடொன்றை எட்ட வேண்டும் எனவும், சமாதானப் பேச்சுகளின் மூலம் நிரந்தர சமாதானத்தை எட்டுமாறும் தென்னாபிரிக்கா மீண்டுமொரு தடவை கோரிக்கை விடுத்துள்ளது. (அ-சி)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசம்மா வில்லியம்

நவாலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா வில்லியம் நேற்று (03.02.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வில்லியத்தின் அன்பு மனைவியும் ஜெயசீலன் (பிரதி அதிபர், யா/மத்திய கல்லூரி), தாமசீலன் (ஆசிரியர், அட்டகிரி சைவ வித்தியாலயம்), ஞானசீலன் (ஆசிரியர், நுவரெலியா பகா வித்தியாலயம்), தேவி (ஆசிரியை, நவாலி நல்லாயன் முன்பள்ளி), சத்தியசீலன் (ஆசிரியர், நவாலி ஸ்தான அ.மி.பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வசந்தா (ஆசிரியை, மானிப்பாய் மகளிர் கல்லூரி), சுவர்ணா, மாலா, இம்மனுவேல் (தபாலதிபர், யாழ்ப்பாணம்), மதி ஆகியோரின் அன்பு மாமியாரும் நிஷி, நிஷாந்தன், தர்சினி, நிலோசினி, வெனிசியா, கிறிஸ்ரினா, ரஜீவ், நிந்துஷா, சுஜிவ், வின்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (04.02.2009) புதன்கிழமை பி.ப. 3.45 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக சென்.பீற்றர்ஸ் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:
ஜெயசீலன் (மகன்).

### திருமதி சிவகுமார் வளர்மதி



மூளாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் அராலி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவகுமார் வளர்மதி நேற்றுமுன்தினம் (02.02.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் வைரவநாதன் - சிவகுமாரின் அன்பு மனைவியும் சிவானந்தன் - நாகலட்சுமி தம்பதியினரின் பாசமிகு மகளும் வைரவநாதன் - தங்கமலர் தம்பதியினரின் மருமகளுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நொச்சியம்பதி வீதி, அராலி மேற்கிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (04.02.2009) புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வட்டுக்கோட்டை வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நொச்சியம்பதி வீதி,
அராலி மேற்கு.

தகவல்:
வை.சிவகுமார் (கணவர்).

## ஊரெழுவில் லூர்து மாதா திருவுருவப் பவனி இன்று

யாழ்ப்பாணம், பெப் 04

மட்டுவில் வடக்கு லூர்து மாதா தேவாலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த 31.01.2009 கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. கொடியேற்றம் சாவகச்சேரி பங்குத்தந்தை எஸ்.தயாகரன் தலைமையில் நடைபெற்றது. உற்சவத்தின் திருப்பலிப் பூசையும் திருச்சொரூப பவனியும் இன்று புதன் காலை 7 மணிக்கு நடைபெற வுள்ளன. (1-131)

## மின்சாரம் தொடர்பான பிரச்சினைக்கு ஒன்றரை மாதத்தில் தீர்வு கிடைக்கும்

### அமைச்சர் தேவானந்தா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.04

இன்னும் ஒன்றரை மாதங்களுக்குள் யாழ். குடாநாட்டில் மின்சாரம் தொடர்பிலான பிரச்சினைகள் தீர்க்கப்படும். குடாநாட்டிற்கு 24 மணி நேரமும் மின்சாரம் வழங்கக்கூடிய வகையில் உரிய அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வடமாகாணத்திற்கான விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நெடுந்தீவுப் பிரதேச பிரிவுக்குட்பட்ட பகுதி வாழ் மக்களின் குறைபாடுகள், தேவைகள் மற்றும் அப் பகுதி சார்ந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து நேற்றைய தினம் கலந்துரையாடியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் மின்சாரம் தொடர்பான பிரச்சினையால் பல்வேறு சிரமங்களை பொதுமக்கள் எதிர்கொண்டு வருவதை சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இன்னும் ஒன்றரை மாதங்களில் இப்பிரச்சினை தீர்க்கப்பட்டு விடும் என்றும் குடாநாட்டில் தற்போது அதிகரித்து வரும் தேவைக்கேற்ப மின் சாரத்தை உற்பத்தி செய்து வழங்கக்கூடிய சூழ்நிலை விரைவில் ஏற்படும்.

கிராம மட்டத்தில் இருந்து யாழ். குடாநாட்டில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வருகின்ற வேலைத்திட்டத்தின் கீழ் மேலும் பல பகுதிகளுக்கு மின் இணைப்புக்களை வழங்கவேண்டி இருப்பதை உணர்த்திய அமைச்சர் இத் தேவைகள் அனைத்தும் வெகு விரைவில் பூர்த்தி செய்யப்படும் என்றும் தெரிவித்தார் என்று அமைச்சு நேற்று விடுத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தொடரைக் கைப்பற்றியது இந்தியா!



கொழும்பு, பெப். 04

வீரேந்தர் ஷேவாக் மற்றும் யுவராஜ் சிங் ஆகியோரின் அதிரடிச் சதத்தால் இந்திய அணி நேற்று இலங்கை அணியை 147 ஓட்டங்களால் அபார வெற்றியீட்டியுள்ளது.

இதனடிப்படையில் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை இந்தியா 3:0 என்ற அடிப்படையில் தனதாக்கிக் கொண்டுள்ளது.

ஏற்கனவே 2:0 என்ற நிலையில் இந்திய அணி நேற்று 3 ஆவது ஆட்டத்தில் இலங்கையுடன் மோதியது. கொழும்பு, ஆர்.பிரேமதாஸா விளையாட்டரங்கில் பகலிரவுப் போட்டியாக நேற்று இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணித்தலைவர் டோனி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். இதனடிப்படையில் ஆரம்ப வீரர்களாக சச்சின் டெண்டுல்கர் மற்றும் வீரேந்தர் ஷேவாக் ஆகியோர் களமிறங்கினர்.

அணியின் ஓட்ட எண்ணிக்கை 9 ஆக இருந்தபோது பர்னாண்டோ வீசிய பந்தில் டெண்டுல்கர் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்து 7 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

அணியின் ஓட்ட எண்ணிக்கை 24ஆக இருந்தபோது கௌதம் கம்பீர் 10 ஓட்டங்களுடன் 'ரண் அவுட்' முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார். பின்னர் வந்த யுவராஜ், ஷேவாக்குடன் இணைந்தார்.

இருவரும் இலங்கையின் பந்துவீச்சை மாறி மாறி விளாசித் தள்ளினர். 3ஆவது விக்கெட் இணைப்பாட்டமாக இருவரும் 221 ஓட்டங்களை அதிரடியாகப் பெற்றனர்.

31.5 ஓவரில் அணியின் ஓட்ட எண்ணிக்கை 245 ஆக இருந்தபோது யுவராஜ் சிங் 95 பந்துகளில் ஒரு சிக்ஸர், 17 பவுண்டரிகள் அடங்கலாக 117 ஓட்டங்கள் குவித்து முரளியின் பந்துவீச்சில் கப்புக் கெதரவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

பின்னர் அணியின் ஓட்ட எண்ணிக்கை 265 ஆக இருந்தவேளை ஷேவாக் 90 பந்துகளை எதிர்கொண்டு 17 பவுண்டரிகள் அடங்கலாக 116 ஓட்டங்கள் குவித்து 'ரன் அவுட்' முறையில் வெளியேறினார்.

இந்திய அணித்தலைவர் டோனியும், யூசப் பதானும் பின்னர் அதிரடியைத் தொடர்ந்தனர்.

இறுதியில் இந்திய அணி 50 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 363 ஓட்டங்களை எடுத்தது. யூசப்பதான், டோனி ஆகியோர் முறையே 59, 35 ஓட்டங்களைப் பெற்றனர்.

இலங்கையின் பந்துவீச்சில் முரளிதரன், யுவராஜ் சிங்கின் விக்கெட்டைக் கைப்பற்றியதன் மூலம் பாகிஸ்தானின் முன்னாள் அணித்தலைவர் வசீம் அக்ரமின் உலக சாதனையை சமன் செய்தார்.

364 என்ற இமாலய இலக்கை அடைந்தால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இலங்கை அணி, 41.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 216 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 147 ஓட்டங்களால் படுதோல்வி அடைந்தது. அணியின் சார்பில் குமார சங்கக்கார, டில்சான், மஹேல ஆகியோர் முறையே 83, 31, 30 ஆகிய ஓட்டங்களைப் பெற்றனர்.

இந்தியாவின் பந்துவீச்சில் ஒஜ்கா 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். நேற்றைய போட்டியின் ஆட்ட நாயகனாக யுவராஜ் சிங் தெரிவானார்.

## இலங்கையில் யுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விதிக்குமாறு கோரி ஜெயநிதி சரவண சதீஷ்குமார் உச்ச நீதி மன்றில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தார். அந்த மனு மீதான விசாரணை எதிர்வரும் 16 ஆம் திகதி இடம் பெறும் என்று தெரிவித்த உச்ச நீதிமன்றம் இதனை உடனடியாக விசாரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும்-

''தங்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்த ஒவ்வொருவருக்கும் உரிமை உள்ளது. அதனால் பொது வேலை நிறுத்தத்துக்கு தடை விதிக்க முடியாது'' என்றும் - தெரிவித்தார்.

இதே வேளை-

இந்தப் போராட்டத்தால் குடிதண்ணீர், பால், மருத்துவம், மின்சாரம் மற்றும் ரயில், பஸ் ஆகிய சேவைகளுக்கு இடையூறு இல்லாமல் இயங்க தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

மாநில, மத்திய அரசு அலுவலகங்கள், வங்கிகள், பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள், சந்தைகள் ஆகியவை வழக்கம் போல் செயற்படவும், சட்ட ஒழுங்கு பராமரிக்கவும் அனைத்து ஒழுங்குகளையும் தமிழகப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

போக்குவரத்துத் தடைகள் மற்றும் பணிகளுக்கு செல்வோரைத் தடுத்தல், கடைகள் மற்றும் திரையரங்குகள், பெற்றோல் நிலையங்கள் ஆகிய வற்றை வற்புறுத்தி மூடச்செய்தல் போன்ற செயல்களில் ஈடுபடுவோரும், சாலை மறியல், உருவபொம்மை எரித்தல், அரச சொத்துக்கு சேதம் விளைப்போர் மீது தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அதேவேளை இலங்கையில் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தி புதுச்சேரியிலும் இன்று பொது வேலை நிறுத்தம் நடத்தப்படுகின்றது.

எதிர்வரும் 7 ஆம் திகதி அங்கு கறுப்பு கொடி அமைதி ஊர்வலம் நடத்தப்பட வுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாம்பரம் விமான நிலையத்துக்கு பயிற்சிக்கு வந்திருந்த இலங்கை விமானப்படையினர் திருப்பி அனுப்பப்பட்டனர்

## மக்களின் கிளர்ச்சியை அடுத்து மத்திய அரசு நடவடிக்கை

சென்னை,பெப். 04

சென்னை தாம்பரத்திலுள்ள விமானப் படை பயிற்சி நிலையத்திற்கு வந்த இலங்கை விமானப் படைச் சிப்பாய்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழக மக்கள் எரிமலையாகக் கிளர்ந்தெழுந்து ஆர்ப்பாட்டம் செய்தனர் என்றும் -

இச்செய்தி முதல்வர் கருணாநிதிக்கு தெரிய வந்ததையடுத்து அவரின் வேண்டு கோளுக்கிணங்க இலங்கை விமானப் படைச் சிப்பாய்களை மத்திய அரசு உடன் திருப்பியனுப்ப உத்தரவிட்டது என்றும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கை விமானப்படைச் சிப்பாய்கள் சிலர் சென்னை தாம்பரத்திலுள்ள விமானப் படை பயிற்சி நிலையத்திற்கு வந்திருக்கின்றனர் எனவும், அவர்களுக்குப் பதிவு வழங்குமாறும் தாம்பரம் விமானப்படையினர் சேலைர் பொலிஸ் நிலையத்தைக் கேட்டுக்கொண்டனர் என்ற செய்தி முதல்வர் கருணாநிதிக்குத் தெரிய வந்தது. இதைத்தொடர்ந்து, அவரது அறிவுரையின் படி தலைமைச் செயலாளர் கே.எஸ்.ஸ்ரீபதி, மத்திய அரசின் பாதுகாப்புத் துறையுடன் தொடர்புகொண்டு, அவர்களை உடனடியாகத் திருப்பி அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

முதல்வர் கருணாநிதியின் கோரிக்கையை ஏற்று மத்திய அரசு, அந்த இலங்கை விமானப்படைச் சிப்பாய்களை தமிழகத்திலிருந்து திரும்பி அனுப்ப உத் தரவிட்டதுடன், அந்தச் செய்தியையும் முதலமைச்சருக்குத் தெரிவிக்குமாறு கூறியுள்ளது - என்றுள்ளது.

இதனால் இலங்கை அரசுப் படைகளுக்கு உதவும் மத்திய அரசின் துரோகம் அம்பலமாகி இருப்பதாக அவதானிகள் இங்கு கருத்துத் தெரிவித்தனர்.

## புதுக்குடியிருப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் வீதிகளிலும் வளவுகளிலும் சிதறிக்கிடப்பு[illegible] அவை ஆங்காங்கே அடக்கம் செய்யப்பட்டு வருகின்றன என்றும் இணையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**எரிகுண்டுகள் ஏவப்படுகின்றனவா?**

பீரங்கித் தாக்குதலில் ஏவப்படும் குண்டுகள் பட்டதை எல்லாம் எரிக்கும் தன்மையுடையவையாகவே காணப்படுவதாகவும் படையினர் புதுவகை எரிகுண்டுகளை பயன்படுத்துகின்றனரோ என்ற சந்தேகம் எழுவதாகவும் இணையத்தளம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு மருத்துவமனை மீது நேற்றுப் பிற்பகல் குறைந்தது இரண்டு தடவைகள் பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பிற்பகல் 5.30 மணிக்குப் பிறகு இடம்பெற்ற இத் தாக்குதல்களில் சத்திர சிகிச்சைப் பிரிவு பலத்த சேதமடைந்தது. உயிர்ச்சேதங்கள் குறித்த விவரம் தெரியவில்லை.

உடையார்கட்டு மருத்துவமனையில் நேற்று 12 சடலங்கள் ஒப்படைக்கப் பட்டுள்ளன. அங்கு பீரங்கித் தாக்குதலில் காயமடைந்த 16 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சுதந்திரபுரம் மருத்தவமனையில் நேற்று 10 சடலங்கள் கையளிக்கப்பட்டன. அங்கும் பீரங்கித் தாக்குதலில், காயமடைந்த 44 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்று நடைபெற்ற மீட்புப் பணிகளில் மொத்தம் 55 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ-02)

## காலிமுகத்திடலில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முப்படையினரும் மரியாதை வேட்டுக்களைத் தீர்ப்பர். அவர்களினதும் பொலிஸாரினதும் அணிவகுப்பு மரியாதை, பாண்ட் வாத்திய இசை ஆகியனவும் இடம்பெறும். விமானப்படையினரதும் கடற்படையினரதும் கண்காட்சி நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

ஜனாதிபதி உத்தியோகபூர்வமாகச் சுதந்திரதின உரையை நிகழ்த்துவார்.

மூவாயிரத்துக்கும் அதிகமான பொலிஸாரும் முப்படையினரும் இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வர் பாதுகாப்புக் கடமைகளில் பெரும் எண்ணிக்கையினர் ஈடுபடவுள்ளனர்.

சுதந்திரதின விழாவை முன்னிட்டு கொழும்பு நகரில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. காலிமுகத்திடலுக்குச் செல்லும் வீதிகள் 30 ஆம் திகதி முதல் மூடப்பட்டுள்ளன.

சுதந்திரதின விழா மற்றும் 'தேசத்தின் மகுடம்' கண்காட்சி என்பனவற்றை முன்னிட்டுக் கொழும்பிலுள்ள 20 பாடசாலைகள் 28 ஆம் திகதிமுதல் மூடப்பட்டுள்ளன. தேசத்தின் மகுடம் கண்காட்சியின் முதல்நாள் பாதுகாப்பு தினமாகவும் இரண்டாவது நாள் கலாசார தினமாகவும் மூன்றாவது நாள் நலன்புரி தினமாகவும் நான்காவது நாள் அபிவிருத்தி தினமாகவும் இறுதிநாள் ஊடகவியலாளர் தினமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபப் பகுதி அதிஉயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. (அ-சி)

## மாநிலம் முழுவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்று தி.மு.க. மீண்டும் கோரியிருக்கின்றது. அத்தகையதொரு தீர்வினை குறிப்பிட்ட காலவரையறைக்குள் உருவாக்கி மத்திய அரசு செயற்படுத்தி உதவ வேண்டும் எனவும் அம் முயற்சிகளுக்கு இலங்கை அரசு முழுமையான ஒத்துழைப்பை நல்கவேண்டும் என்றும் தி.மு.க செயற்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பின்னர் கேள்விகளுக்குப் பதிலளித்த கலைஞர் கருணாநிதி, இலங்கை இனப் பிரச்சினையில் ஐக்கிய நாடுகள் சபை தலையீடு செய்தால் அதைத் தான் வரவேற்பார் என்றும்-

ஈழத் தமிழர் விவகாரத்தில் மத்திய அரசின் நடவடிக்கைகள் போதிய திருப்தி அளிக்கவில்லை என்றும் - குறிப்பிட்டார். (அ-02)

## கூட்டமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் தங்கி நின்று பல அதிகாரி களுடனும் தொடர்பு கொண்ட அவர்கள், அம் முயற்சிகள் பலனளிக்காத நிலையில் வந்த வழியே கொழும்பு திரும்பினர்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய சுரேஷ் பிரேமச்சந்திரன், சந்திரநேரு சந்திரகாந்தன் மற்றும் ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன ஆகியோருக்கே இவ்வாறு அனுமதி மறுக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாங்கள் மன்னாருக்குச் செல்கிறார்கள் என இவர்கள் ஈரற்பெரியமகுளம் சோதனைச் சாவடியில் தெரிவித்த போதிலும், பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின்றி அவர்கள் பிரயாணத்தைத் தொடர்வதற்கு அனு மதிக்க முடியாது எனப் படையினர் கண்டிப் பாகத் தெரிவித்துவிட்டனர் என்று நாடாளு மன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய தங்களுக்கே இந்தக் கதியென்றால் சாதாரண குடிமக்களின் நிலைமை எப்படி இருக்கும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன கேள்வி எழுப்பினார்.

இரண்டரை மணித்தியாலங்களுக்கு மேலாக பிரயாண அனுமதிக்காகத் தாங்கள் காத்திருந்தனர் எனவும் இதன்போது உரிய உயரதிகாரிகளின் கவனத்திற்கு இந்த விடயத்தைத் தாங்கள் கொண்டுவந்த போதிலும், பிரயாணத்தைத் தொடர்வதற்கான அனுமதி மறுக்கப்பட்டமையையடுத்து, தாங்கள் மீண்டும் கொழும்புக்குத் திரும்பினர் என்றும் டாக்டர் ஜயலத் ஜயவர்தன தெரிவித்தார்.

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியாவுக்கு வந்துள்ள மக்களையும், வவுனியா வைத்தியசாலையில் மேல் சிகிச்சை பெற்று வருகின்ற வன்னிப்பகுதி நோயாளர்களையும் பார்வையிடுவதும் அவர்களின் இந்த விஜயத்தின் நோக்கம் என்று கூறப்பட்டது. (அ-சி)

# மற்றொரு ஓடுதளம் படைகளிடம் சிக்கியது

கொழும்பு பெப்.4

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, பிரமந்தனாறு, தந்திரபுரம் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் ஏழாவதும் கடைசியுமான விமான ஓடு தளத்தை நேற்றுக்காலை படையினர் கைப்பற்றினர் என்று இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அந்த விமானத் தளம் சுமார் 2 கிலோ மீற்றர் நீளமுடையது என்று படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

## உண்மையான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து எமது தாய் நாட்டை விடுவிக்கும் பொருட்டு தீர்க்கமான மனிதாபிமான செயற்பாட்டினை நாம் ஆரம்பித்தது முதல் அண்மைய மாதங்களில் எமது சுதந்திரத்தைப் பலப்படுத்துவதில் மேற்கொள்ளப்பட்ட சாதனைகள் காரணமாக மட்டற்ற பெருமிதம் ஏற்படுகின்றது.

2006 ஒகஸ்ட் மாதம் மாவிலாறில் இருந்து பயங்கரவாதிகளைத் துரத்துவதில் எமது சுதந்திரமான ஜனநாயக சமுதாயத்தில் உள்ள வீரமுள்ள துருப்புகள் பெற்ற வெற்றியில் ஆரம்பித்து முழுக் கிழக்கையுமே விடுவிப்பதில் ஈடுபட்டு நாம் அநேகமாக இப்போது யாழ். குடாநாடு உட்பட வடக்கிலும் உள்ள எமது சகல நிலங்களினதும் கட்டுப்பாட்டை மீளப் பெற்றுள்ளோம்.

கிளிநொச்சி, ஆனையிறவு, முல்லைத்தீவு போன்ற வெல்ல முடியாது என வர்ணிக்கப்பட்ட பயங்கரவாதத்தின் கோட்டைகள் ஒன்றன் பின் ஒன்றாக வீழ்ந்தன. எமது தாய்நாட்டிலிருந்து பயங்கரவாதம் இறுதியாக அழிக்கப்பட்டு எமது மக்கள் அனைவருக்கும் உண்மையான சுதந்திரம் பிறக்கும் நாள் எட்டக்கூடிய தொலைவிலேயே உள்ளது.

61ஆவது சுதந்திரத்தின்போது நாம் 1948 இல் அடைந்ததையும் விட சுதந்திரத்தின் வாயிற்படிக்கு அப்பால் உள்ள மிகவும் அர்த்த புஷ்டியான சுதந்திரத்தை நோக்கி நாம் இப்போது நகர்ந்துள்ளோம்.

இதனை உறுதிப்படுத்தும் முகமாக எமது வீரமிக்க படையினர் செய்த அர்ப்பணங்கள் மற்றும் அவர்கள் வெளிக்காட்டிய தைரியம், மன உறுதி என்பவற்றுக்காக அவர்களுக்குப் புகழ் மாலை சூடுவதற்கு இதனை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்துகின்றேன்.- என்பதாகும்.

## வன்னியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் பேச் சாளர் கோர்டன் வெய்ஸ் இதனைத் தெரி வித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

புதுக்குடியிருப்பு மருத்துவமனை கடந்த திங்கட்கிழமை ஷெல் தாக்குதலுக்கு உள்ளானது. இதில் பெண் தாதியொருவர் உட்பட 11 பேர் கொல்லப்பட்டனர்.

இந்த ஷெல் எங்கிருந்து வந்தது என்பது உறுதியாகத் தெரியவில்லை. எனினும் இதனால் ஏற்பட்ட இழப்புகள் குறித்து இரு தரப்புகளுக்கும் தெளிவுபடுத்தியுள்ளோம். ஆனால் இன்னமும் தாக்குதல் நிறுத்தப்படவில்லை.

**புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரியில் 600 நோயாளர்கள்**

மருத்துவமனையில் 600 நோயாளர்கள் உள்ளனர். இது தவிர பலர் எந்த நேரத்திலும் காயத்துடன் வருகின்ற நிலைமை. இவர்களுக்கு சிகிச்சை யளிக்க முடியாதுள்ளது.

இவ்வாறு காயப்பட்டவர்களை மீண்டும் அரச கட்டுப்பாட்டு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வது குறித்து செஞ்சிலுவைக்குழு ஆராய்ந்து வருகின்றது.

மோதல் நடைபெறும் பகுதிகளில் உள்ள மக்களைப் பாதுகாப்பதே எமது முக்கிய முன்னுரிமைப் பணியாகும்.

மனிதாபிமான உதவிகளுக்கும் உணவு, மருந்து போன்றவற்றைக் கொண்டு செல்வதற்குமே முன்னுரிமை அளிக்கின்றோம். இன்னமும் நான்கு மருத்துவமனைகள் உள்ளன. அவற்றில் போதியளவு மருந்துகள் இருப்பதை உறுதிசெய்ய வேண்டியுள்ளது.

**பத்து பதினைந்து தடவைகள் இடம்பெயர்ந்துள்ளனர்.**

பலர் 10,15 தடவைகள் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களுக்குப் போதிய தங்குமிடங்களோ, உணவோ இல்லை. மருத்துவ நிலையங்கள் கடும் அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளன. கடந்த சில வாரங்களில் மட்டும் காயப்பட்டவர்கள் ஏராளமானோருக்கு அங்குள்ளவர்கள் சிகிச்சையளிக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

கடந்த இரு வாரங்களில் அதிகமானவர்கள் கொல்லப்பட்டமையை ஐக்கிய நாடுகளின் பணியாளர்கள் கண்டுள்ளனர்.

இலங்கையில் மோதல் நடைபெறும் பகுதியொன்றில் மக்கள் சிக்குப்பட்டுத் தப்ப முடியாமல் இருந்தமை இதுவே முதல் தடவை.

பொதுமக்கள் விடுதலைப் புலிகளின் பகுதிகளிலிருந்து வெளியேறுகிறார்களோ இல்லையோ சர்வதேச மனிதாபிமான சட்டம், யுத்த சட்டத்தின்படி அவர்களுக்கு உயிரிழப்புகள் மற்றும் பாதிப்புகளை ஏற்படுத்தும் நடவடிக்கையை இருதரப்பும் தவிர்க்க வேண்டும். (அ-சி)

## பாதுகாப்பு வலயம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் மீள் கட்டமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான டோக்கியோ மாநாட்டின் இணைத்தலைமைகளான நோர்வே, ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவையே கூட்டறிக்கை ஒன்றின் மூலம் இவ்வாறு கோரியிருக்கின்றன.

வடக்கு இலங்கையில் இடம்பெயர்ந்த பல்லாயிரம் மக்கள் யுத்தத்தின் நடுவில் சிக்குண்டுள்ளமை குறித்து இணைத்தலைமைகள் கவலை தெரிவித்துள்ளன.

இணைத் தலைமையின் கூட்டறிக்கையின் சாராம்சம் வருமாறு-

ஐந்நூறுக்கும் அதிகமான நோயாளர்கள் தஞ்சம் புகுந்துள்ள புதுக்குடியிருப்பு வைத்தியசாலை மற்றும் ஏனைய மருத்துவக் கட்டமைப்புக்கள், மேலும் பல நூற்றுக்கணக்கானோர் புகலிடம் புகுந்துள்ள - இலங்கை அரசினால் தாக்குதல் தவிர்ப்புப் பிரதேசங்களாக அறிவிக்கப்பட்ட - இடங்கள் போன்றவற்றில் இருந்தும் அவற்றை நோக்கியும் தாக்குதல் நடத்தவேண்டாம் என இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் இணைத்தலைமைகள் கூட்டாக வேண்டிக் கொள்கின்றன.

யுத்தத்தில் சிக்கியுள்ள மக்களுக்கு உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் சென்றடைவதை அனுமதிக்கும்படியும், அவசர மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்களை மீட்பதற்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கு ஒத்துழைக்கும்படியும், மருத்துவ மற்றும் தொண்டுப் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்படியும் இரு தரப்புக்களையும் இணைத்தலைமைகள் கோருகின்றன.

சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் மதிக்கவேண்டும்.

சிவிலியன்களுக்கு நடமாடும் சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுப்பதற்குப் புலிகளை இணங்க வைக்க எடுக்கப்பட்ட சர்வதேச முயற்சிகள் தோற்றுவிட்டன.

அங்கு அவர்கள் இருப்பது, பெரும்பாலும் வடக்கில் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் அனைத்தையும் புலிகள் இழந்துபோகும் அந்த சொற்ப காலம் வரைதான்.

சிவிலியன்கள், யுத்தம் புரிவோர் என மேலும் பலர் உயிரிழப்பது எந்தப் பயனையும் தரமாட்டாது என்பதை புலிகளும் இலங்கை அரசும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

**மனித இழப்புக்களை தவிர்க்க தற்காலிக தாக்குதல் தவிர்ப்புக் காலம் தேவை**

மனித இழப்புக்கள், அவஸ்தைகளைத் தவிர்ப்பதற்காக-

ஆயுதங்களைக் கீழே வைத்து, வன்முறை வழிகளைத் துறந்து, மன்னிப்பு அளிக்கும் இலங்கை அரசின் வாய்ப்பை ஏற்று, நீடித்து, நிலைத்து நிற்கும் தீர்வை எட்டுவதற்கான அரசியல் நடவடிக்கைளில் ஓர் அரசியல் கட்சியாகப் பங்குபற்றுவது உட்பட மோதலை நிறுத்துவதற்கான வழிவகைகள் குறித்து இலங்கை அரசுடன் கலந்தாலோசிக்குமாறு விடுதலைப் புலிகள் அமைப்பை இணைத்தலைமை கோருகின்றது.

நோயாளர்கள் மற்றும் காயமுற்றோரை வெளியேற்றுவதற்கும் சிவிலியன்களுக்கான உதவிப் பொருட்கள் சென்றடைவதற்கும் வசதியாக தற்காலிக - தாக்குதல் தவிர்ப்புக் காலம் ஒன்றை - அறிவிக்குமாறும் இலங்கை அரசையும் புலிகளையும் இணைத்தலைமை கோருகின்றது.

ஐ.நா. முகவர் அமைப்புக்கள், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, மனிதநேய அமைப்புக்கள் போன்றவை முழு அளவில் சென்று செயற்படக்கூடிய தற்காலிக முகாம்களுக்கு வட பகுதியில் இடம்பெயர்ந்த அகதிகள் மாற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும்-

அந்த அகதிகள் சர்வதேச நியமங்களுக்கு அமைய நடத்தப்படுத்துவதற்கும் -

அவர்கள் தங்களின் மூல இடங்களில் மீளக்குடியமர்த்தப்படுவதற்கும் -

நல்லிணக்கமும் நீடித்த சமாதானமும் கிட்டக்கூடிய அரசியல் தீர்வை வேண்டி அதற்கு உடன்படுவதற்கான கோரிக்கைக்கும் -

ஆன-நடவடிக்கைகளை முன்னெடுக்க இலங்கை அரசு, இந்தியா, ஐ.நா. மற்றும் ஏனைய தரப்புகளுடன் சேர்ந்து இணைத்தலைமைகள் பணியாற்றும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)


A/L மாணவர் கவனத்திற்கு
★ Z புள்ளியில் பிரச்சினையா?
★ பாடத் தெரிவில் மாற்றம் செய்ய விருப்பமா?
உங்கள் தெரிவிற்கான பாடங்கள் நடைபெறுகின்றன.
★ வணிகப்புள்ளி விவரவியல்
★ இலகு கணிதம்.
திங்கள், செவ்வாய் 3.30 - 4.30
DMI நாவலர் வீதி, யாழ்.

தகவல் தொழில் நுட்பத்தில் நீங்களும்
BIT
விஞ்ஞானமாணி தகவல் தொழில்நுட்பம்
Bachelor of Information Technology
External Degree Programme
University of Colombo School of Computing
புதிய கல்வியாண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது
(A/L) எத்துறை சார்ந்த மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்
BIT பட்டமளிப்பில் சிறப்பு விருது பெற்ற நிறுவனம்
விண்ணப்பங்களிற்கும் பதிவுகளுக்கும்
MCS, 324, Palaly Road, Jaffna.
Supported by UNDP/IRRP

தேவை
எமது அலுவலகத்திற்கு எழுதுவினைஞர் (Clerk) தேவை. ஆண்கள் நேரில் வரவும்.
NEC (பெருமாள் கோவிலுக்கு அருகாமை)

CHEMISTRY
N.VAKEESAN
ஆரம்பமாகின்றது...
2011 : Wed: 3.pm
மீட்டல் : Inorganic thu : 3pm
இராமநாதன் வீதி,
(பல்கலைக்கழகம் முன்பாக)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.02.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org